# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. இ. பெரியசாமி**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **1.** | **முன்னுரை** | 1 |
| **2.** | **தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்** | 11 |
| 2.1 | ஊராட்சி அமைப்புகளின் வரலாறு | 13 |
| 2.2 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் | 19 |
| 2.3 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் | 21 |
| 2.4 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் | 29 |
| 2.5 | சொந்த வருவாய் இனங்கள் | 42 |
| 2.6 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் (PAR) | 45 |
| 2.7 | சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விருதுகள் வழங்குதல் | 46 |
| 2.8 | புதிய முயற்சிகள் | 52 |

| | | |
|---|---|---|
| **3** | **மாநில அரசுத் திட்டங்கள்** | 57 |
| 3.1 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –II | 59 |
| 3.2 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊரக நூலகங்கள் புதுப்பித்தல் | 66 |
| 3.3 | வீட்டு வசதி திட்டங்கள்<br>3.3.1 கலைஞரின் கனவு இல்லம் | 68 |
| | 3.3.2 ஊரகப்பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது பார்த்தல் | 73 |
| | 3.3.3 புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல் | 77 |
| | 3.3.4 மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் மற்றும் மீளக்கட்டுதல் | 79 |
| | 3.3.5 இதர துறைகளுக்கான வீட்டு வசதி திட்டங்கள் | 83 |
| 3.4 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 84 |
| 3.5 | நமக்கு நாமே திட்டம் (ஊரகம்) | 86 |
| 3.6 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 88 |





| | | |
|---|---|---|
| 3.7 | முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 93 |
| 3.8 | நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD – RIDF) | 98 |
| 3.9 | பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS) | 104 |
| 3.10 | பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SIDS) | 107 |
| 3.11 | அரசு பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டம் (RBIOCGS) | 108 |
| 3.12 | ஊரக பகுதியின் நீர்நிலைகளை புதுப்பித்தல் | 109 |
| 3.13 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி (SCPAR) | 111 |
| 3.14 | பிற துறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள் | 113 |

| | | |
|---|---|---|
| **4** | **ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்** | 115 |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் (MGNREGS) | 117 |
| 4.2 | "அனைவருக்கும் வீடு "பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் (PMAY –(G) | 145 |
| 4.3 | பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM–JANMAN) | 152 |
| 4.4 | ஜல் ஜீவன் மிஷன் (JJM) | 156 |
| 4.5 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) | 165 |
| 4.6 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 167 |
| 4.7 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) | 169 |
| 4.8 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM – G) | 176 |
| 4.9 | ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம் | 197 |
| 4.10 | பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள் | 199 |







| | | |
|---|---|---|
| **5.** | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு** | 201 |
| 5.1 | பணியமைப்பு | 203 |
| 5.2 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 204 |
| 5.3 | பொறியியல் பணியமைப்பு | 205 |
| 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 209 |
| **6.** | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | 213 |
| 6.1 | திறன் மேம்பாடு | 215 |
| 6.2 | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | 217 |
| 6.3 | பயிற்சி முறைகள் | 220 |
| 6.4 | பயிற்சி செயல்திறன் | 221 |
| 6.5 | கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டம் (GPDP) வகுப்பதற்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் (NGOs) உடன் இணைந்து செயலாற்றுதல் | 223 |
| 6.6 | இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல் | 225 |
| 6.7 | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனங்கள் | 227 |
| 6.8 | செயல்திறன் | 227 |

| | | |
|---|---|---|
| 6.9 | ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCPs) | 230 |
| 6.10 | மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA) | 231 |
| **7** | **வரவு செலவுத் திட்டம் 2024–25** | 235 |
| **8** | **முடிவுரை** | 239 |




# 1. முன்னுரை

**முன்னுரை:**

"அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாறவேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரீகத்தால், பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத் தாழ்வற்ற, ஒரு மனித உரிமைச் சமுகமாக நாம் மாற வேண்டும்."

**– மு.க. ஸ்டாலின்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**"இந்தியாவின் உயிர் அதன் கிராமப் புறங்களில் தான் உள்ளது"** என்ற அண்ணல் காந்தியடிகளின் வழியிலும், **"நகர்ப்புறங்களின் வசதி வாய்ப்புகளைக் கிராமப்புறத்து மக்கள் ஒரு கால கட்டத்திற்குள் பெற்றிட வேண்டும்"** என்ற மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியிலும், அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியில் கிராமப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

ஊரகப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முக்கியமான பணியாகும். மேலும் புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்துவதில் தமிழ்நாடு ஓர் முன்னோடி மாநிலமாக திகழ்வதுடன், இத்துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் கொள்கைகள், சமூக நீதி, சமச்சீர் பங்கீடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்வேகமிக்க சீரிய தலைமையிலான இந்த அரசு, தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்க அயராது செயல்பட்டு வருகிறது. ஒட்டு மொத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய ஊரகப் பகுதிகளில் பொது சொத்துக்களை



உருவாக்குதல் மற்றும் வாழ்வாதார தேவைகளை அதிகரித்தல் ஆகியவற்றினை செயல்படுத்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு அடிப்படையில் தமிழ்நாடு அரசின் வழிக்காட்டுதலுக்கு இணங்க பல்வேறு அரசுத்துறைகளுடன் இணைந்து இத்துறை செயல்படுகிறது.

**"அனைவருக்கும் வீடு" மற்றும் "2030–க்குள் குடிசையில்லா ஊரக தமிழ்நாடு"** என்பது அரசின் முதன்மை நோக்கமாக உள்ளது. இதன் ஓர் அங்கமாக *"கலைஞரின் கனவு இல்லம்"* என்ற புதிய திட்டம் 2024–25ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

பெரியாரின் சமூக நீதி, நல்லிணக்கம் மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் அமைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டது. பழைய சமத்துவப்புரங்களில் உள்ள கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய சமத்துவபுரங்கள்

நடப்பாண்டில் உருவாக்கிட அரசு முயற்சிகள் எடுத்துள்ளது.

ஊராட்சி அமைப்பின் அனைத்து அடுக்குகளிலும் சமச்சீரான வளர்ச்சியை ஏற்படுத்தும் தனித்துவமான திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஐந்தாண்டுகளில் நீர் ஆதார அமைப்புகளை வளப்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட சாலை மற்றும் தெருக்கள் அமைத்தல், நூலகங்கள், சமத்துவ மயானங்கள் ஆகிய அடிப்படை தேவைகளை ஏற்படுத்தும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள், வளர்ச்சி திட்டங்களில் பங்களிப்பு வழங்கி பங்கேற்பதை ஊக்குவிக்கவும், அடிப்படை தேவையில் ஏற்படும் இடைவெளியை குறைக்கவும், பொது சொத்துக்களை மக்கள் பாதுகாக்கவும் தங்களின் பங்களிப்பை அளிக்கும் வகையில் **"நமக்கு நாமே திட்டம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களும் வறுமையின் பிடியிலிருந்து மீள வேண்டும் என்பது அரசின் அடிப்படை கொள்கையாக விளங்குகிறது. ஊரகப்பகுதிகளில் தேவையான ஊதிய வேலைவாய்ப்பினை வழங்குவதோடு, தனிநபர் மற்றும் பொது சொத்துக்களை உருவாக்கி, மக்களின் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றுவதை ஒன்றிய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் உறுதி செய்துள்ளது.

ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல் சுகாதாரம் போன்றவை இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள சாலை வசதிகளை மேம்படுத்தவும் நகர்ப்புற மையங்களுடன்

இணைப்பினை ஏற்படுத்திடவும் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டு இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மக்களாட்சி முறையில் அதிகாரப்பரவலாக்கலை மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உறுதி செய்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பினை உறுதி செய்யும் நோக்கில் ஆண்டுக்கு ஆறு முறை கிராம சபைகள் கூட்டப்படவேண்டும் என்ற நடைமுறை கட்டாயமாக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

சுத்தமான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தில் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்டங்கள் ஊரக பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மைக்காக தனியாக ஒரு நிறுவனம் உருவாக்கப்பட உள்ளது.



மாநில, மண்டல மற்றும் வட்டார ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு தலைமை பண்பு, ஆட்சித் திறன் மற்றும் புதிய முயற்சிகள் குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது. வளர்ச்சி திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல முக்கிய பங்கு வகிக்கும் ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சித் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேசிய, மாநில, மண்டல அளவிலான பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக தொடர்ந்து ஆற்றல் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஊரக பகுதிகளுக்கு சிறந்த அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகளை வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழ்கிறது.

# 2. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

## 2. 1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகள் பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். அந்த கால கட்டங்களில், சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக்காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாக தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக்

குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேய அரசு நிர்வாக வசதிக்காக சுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் நடைமுறையில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகார பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்து சட்டம் 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிர்வாக சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து "மதராஸ் பஞ்சாயத்து சட்டம் 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டம் 1958"



ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன:

அ)கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய ஈரடுக்கு ஊராட்சி.

ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

இ) கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல், இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக / மறைமுகமாக தேர்ந்தெடுத்தல்.

ஈ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை மேற்கொள்ள பணித்தல்.

உ) மாவட்ட போர்டுகளை கலைத்தல்.

ஊ) ஆலோசனை வழங்கும் அமைப்பாக மாவட்ட வளர்ச்சிக் குழுவை தோற்றுவித்தல்.

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை சிறந்தமுறையில் செயல்பட்டு, அவைகளுக்கு முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 01.02.1977 மற்றும் 12.09.1979 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் 1986–இல் நடைபெறும் வரை ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிர்வகித்தனர். அதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996–ஆம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல்



நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிர்வகித்தனர்.

அரசியலமைப்பு சட்டத்தின் 73வது திருத்தம் 1992ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதில் ஊராட்சி அமைப்புகளில் பல்வேறு அடிப்படை மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 22.04.1994 அன்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 அமலுக்கு வந்தது. அரசியலமைப்பு (73வது திருத்த) சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஊராட்சி அமைப்பு முறையில் கீழ்க்காணும் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தன:

அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் – கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில்.

ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்.

இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப

உறுப்பினர் / தலைவர் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்

ஈ) உறுப்பினர் மற்றும் தலைவர் பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்.

உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை தொடர்ந்து நடத்துவதற்கு சுதந்திரமான அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.



## 2. 2 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243K பிரிவின்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் 1994 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு மாநில தேர்தல் ஆணையம் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு ஆணையமாக செயல்பட்டு நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி தேர்தல்களை நடத்துகிறது.

ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் கடந்த 2016 ஆம் ஆண்டு மகளிருக்கான இடஒதுக்கீடு 50% என உயர்த்தப்பட்டது. பெண்கள் 7,012 பேர் கிராம ஊராட்சித் தலைவர்களாகவும், 242 பேர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களாகவும், 20 பேர் மாவட்ட ஊராட்சித் தலைவர்களாகவும் பொறுப்பில் உள்ளனர். மேலும் ஊராட்சி நிர்வாகத்தில், மொத்தமுள்ள பிரதிநிதிகளில் 67,756 பேர், அதாவது 56% மகளிர் ஆவர். பல்வேறு திறன் மேம்பாடு பயிற்சிகள் மற்றும்

தலைமைத்துவ பயிற்சிகள் மூலம் பெண் பிரிதிநிதிகளுக்கு முழுமையாக அதிகாரம் அளிப்பதற்கு இந்த அரசு முழுவதுமாக உறுதி கொண்டுள்ளது.

73வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி தமிழ்நாட்டில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் கீழ்க்குறிப்பிட்ட ஆண்டுகளில் நடத்தப்பட்டது.

| | |
|---|---|
| 1996 | முதலாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் |
| 2001 | இரண்டாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் |
| 2006 | முன்றாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் |
| 2011 | நான்காவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் |
| 2019 | ஐந்தாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் (27 மாவட்டங்கள்) |
| 2021 | ஐந்தாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல் (9 மாவட்டங்கள்) |



## 2 . 3 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

### 2 . 3. 1 கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,395 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் சாதாரணத் தேர்தலுக்குப் பிறகு நடத்தப்படும் முதல் கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014–இல் வெளியிடப்பட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட

விவரங்கள் https://tnrd.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம சபை**

தமிழ்நாட்டின் வரலாற்றுப் பதிவுகளில் சோழர் காலத்தில் "ஊர்" மற்றும் "சபை" என்கிற அமைப்புகள் இருந்தன. இச்சபைகள் அவ்வூராட்சியின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகவும், சாமானிய மக்கள் முடிவுகளை எடுப்பதையும் உறுதி செய்தன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243–வது பிரிவின் கீழ் கிராம சபை குறித்து விவரிக்கிறது. கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராமசபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிராம சபையானது வருடத்திற்கு நான்கு முறை – ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் நடத்தப்பட ஏற்கனவே ஆணையிடப்பட்டது. உலக தண்ணீர் தினம் மற்றும் உள்ளாட்சிகள் தினம் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் பொருட்டு வருடத்திற்கு ஆறு முறை (கூடுதலாக மார்ச் 22 –



உலக தண்ணீர் தினம் மற்றும் நவம்பர் 1 – உள்ளாட்சிகள் தினம்) கூட்ட, அரசால் உத்தரவிடப்பட்டது.

மேற்படி கிராம சபை உரிய முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் "நம்ம கிராம சபை" என்ற கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலியின் மூலம் கிராம சபையின் குறைவெண் வரம்பு, தீர்மான நிறைவேற்றல் விவரங்கள், முதன்மை அதிகாரி வருகை நாள், நேரம் கொண்ட புகைப்படம் விவரம் ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.

**கிராம ஊராட்சிக் குழுக்கள்**

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படும்.

- நியமனக்குழு
- வளர்ச்சிக்குழு
- வேளாண்மை மற்றும் நீர்வடிப் பகுதிக் குழு
- பணிகள் குழு
- கல்விக் குழு

**கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் பிரிவு–240–ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும். எதிர்வரும் நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் இதர துறைகளின் ஒருங்கிணைப்புடன் கிராம வளர்ச்சிக்காக திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டமானது ஒன்பது குறிக்கோள்களைக் கொண்டு உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த கருப்பொருள்கள் அடிப்படையில் தயாரிக்கப்படும். மேலும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து 2030 ஆம் ஆண்டிற்குள் கிராம ஊராட்சியினை



வளர்ச்சி அடைந்த கிராம ஊராட்சியாக மாற்றிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும். மேற்படி கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் குறித்த விவரங்கள் www.gpdp.nic.in என்ற ஒன்றிய அரசின் பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

எதிர்வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டப்பணிகளும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே இருக்கவேண்டும்.

**நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் (LSDGs)**

ஐக்கிய நாடுகள் சபையின் 17 நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளில் (SDG) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் மூலம் இலக்குகளை அடையும் நோக்கத்துடன் நீடித்த நிலையான வளர்ச்சி

இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் என ஒன்பது கருப்பொருளாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. வறுமை இல்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி
2. நலவாழ்வு கிராம ஊராட்சி
3. குழந்தை நேய கிராம ஊராட்சி
4. நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
5. தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி
6. உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
7. சமூக நீதி மற்றும் சமூக பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி
8. நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி
9. மகளிர் நேய கிராம ஊராட்சி

ஊராட்சி அமைப்புகள் இந்த நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் அளவில் அடைவதற்காக ஒருமித்த இலக்குகளை ஒன்பது கருப்பொருட்களாக கட்டமைத்து உருவாக்கி உள்ளூர்



அளவிலான இலக்குகளை நிர்ணயித்து தேசிய இலக்கினை அடைய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 2.3.2 ஊராட்சி ஒன்றியங்கள்

தமிழ்நாட்டில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. இந்த ஊராட்சி ஒன்றியங்கள் 5,000 மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்ட நிலப்பரப்பிலான 6,471 வார்டுகள் கொண்டவையாகும்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள், வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

### 2.3.3 மாவட்ட ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி

அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். தமிழ்நாட்டில் மொத்தம் 655 மாவட்ட ஊராட்சி வார்டுகள் உள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கான மாவட்ட ஊராட்சி அடுத்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்குப் பின் உருவாக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உதவி இயக்குநர் நிலை அலுவலர் ஒருவர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமனம் செய்யப்படுகிறார்.

**திருத்தியமைக்கப்பட்ட மாவட்ட திட்டக் குழு**

36 மாவட்டங்களில் மாவட்ட திட்டக்குழு மறுசீரமைக்கப்பட்டது. பிரிவு 243ZD–ன்படி மாவட்ட திட்டக்குழு (DPC) மாவட்டத்தில் உள்ள ஊராட்சி



மற்றும் நகராட்சிகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்டம் முழுவதும் ஒரு வரைவு திட்டத்தை தயாரிக்க வேண்டும். மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் செயல்படுவார். அதன் உறுப்பினர்களாக மாவட்ட ஊராட்சிக்குழு, நகராட்சி மற்றும் பேரூராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செயல்படுவர். இக்குழு ஆலோசனை வழங்கும் அமைப்பாக செயல்படும்.

**2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்**

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன:

அ) மானியம்

ஆ) வரி வருவாய்

இ) வரியில்லா வருவாய்

### 2.4.1 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்

**அ. மாநில நிதிக் குழு மானியம்**

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.



4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட 1994–லிருந்து இதுவரை ஆறு மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

I. **ஆறாவது மாநில நிதி ஆணையம்** (2022–23 – 2027–28)

தமிழ்நாடு அரசால் **06.03.2020** அன்று நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை குறித்து ஆய்வு செய்ய ஆறாவது மாநில நிதிக்குழு ஆணையம் அமைக்கப்பட்டது. இக்குழுவினால் அளிக்கப்பட்ட பரிந்துரைகள் 13.1.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் முன் வைக்கப்பட்டது. இவ்வாணையத்தின் பரிந்துரைகளை பெருமளவில் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆறாவது மாநில நிதிக்குழு ஆணையத்தின் பரிந்துரைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை**

1. ஆறாவது மாநில நிதிக்குழு ஆணையத்தின் செயல்பாட்டுக்காலம் 2022–2023 முதல் 2027–2028 ஆம் ஆண்டு வரை ஆகும்.
2. ஆறாவது மாநில நிதிக்குழு ஆணையம், மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 10% சதவீதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரைத்துள்ளது.
3. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்மான விகிதம் 51 : 49 ஆகும்.
4. அரசு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கியுள்ள மானியத்தினை மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 6:39:55 என்கிற பகிர்மான விகிதத்தில் வழங்கிட ஆணையிட்டுள்ளது.



5. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியமானது ஆறாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள பகிர்மான விதிமுறைகளின்படி பகிர்ந்தளிக்கப்படும்.
6. ஆறாவது மாநில நிதிக்குழு மானியங்களை கீழ்கண்டவாறு இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது.
   1. சிறப்பு மானியம்
   2. பகிர்மான மானியம்

**சிறப்பு மானியம்:**

முன்னுரிமைப் பிரிவுகளில் உள்ள பரிந்துரைகளின்படி சிறப்பு செயல்பாடுகளை மேற்கொள்ள இச்சிறப்பு மானியங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், சிறப்பு மானியங்கள் மூலதன மானிய நிதி (CGF) மற்றும் செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி (OMDGF) என பிரிக்கப்பட்டுள்ளன. இம்மானியங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒதுக்கப்பட்டுள்ளன.

**I. மூலதன மானிய நிதி:**

ஐந்தாவது மாநில நிதிக் குழு, மூலதன மானிய நிதியானது ஆறாவது மாநில நிதிக்குழுவின் காலத்திலும் தொடர்கிறது. ஆறாவது நிதிக்குழு மானியத்தின் பரிந்துரைகளின்படி, 2024-25 ஆம் ஆண்டிற்கு மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.1233 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மூலதன மானிய நிதி மாநில மற்றும் மாவட்ட அளவிலான கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**மூலதன மானிய நிதி – மாநில அளவில் – 2024-25**

2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான மூலதன மானிய நிதியில், நலிவடைந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.720 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.144 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின்



உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.1 கோடியும், ஊரக உள்ளாட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.168 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூலதன மானிய நிதி– மாவட்ட அளவில்**

மாவட்ட அளவில் மூலதன மானிய நிதிக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**II.செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி (OMDGF):**

செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதியானது நிதி பற்றாக்குறை உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒப்படைப்பு நிதிக்கு பதிலாக மாற்றப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டிற்கு ரூ.834.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள குடிநீர்

கட்டணத்தை செலுத்த ரூ.120 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு மின் நுகர்வுக் கட்டண நிலுவைத் தொகையினை செலுத்துவதற்கு ரூ.240 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. ஆறாவது மாநில நிதிக்குழு மானியத்தின் பரிந்துரைகளின்படி நிதி பற்றாக்குறை உள்ள ஊரக உள்ளாட்சிகளுக்கு ஆண்டுக்கு ரூ.336 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. நகர்ப்புற ஊராட்சிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்த ரூ.69 கோடியும், மலைப்பகுதி ஊராட்சிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்த ரூ.30 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கிராம ஊராட்சிகளின் சார்பில் நூலக இயக்குனரகத்திற்கு நூலக முன் வரியாக ரூ.34



கோடி செலுத்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கான சொத்து வரியுடன் சேர்த்து மேற்குறிப்பிட்ட நூலக வரியினையும் வசூலித்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

6. ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் நலப் பணிகளை மேற்கொள்ள துப்புரவுத் தொழிலாளர் நல வாரியத்துக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக, ரூ.60 இலட்சம் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. ஆறாவது நிதிக்குழு மானியத்தின் மூலமாக பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரூ.60 கோடியும், கிராமப்புறங்களில் வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்தியதற்காக

ரூ.10 கோடி வெகுமதியாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**III பகிர்மான மானியம்**

பகிர்மான மானிய நிதியானது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 6:39:55 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2024–25 ஆம் ஆண்டிற்கான அதிகாரப் பகிர்வு நிதி மானியத்திற்காக ரூ.6902.60 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அ) 15 வது நிதிக்குழு மானியம்**

நிதிப்பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2021–22 முதல் 2025–26 வரையிலான காலத்திற்குரியதாகும்.

- வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 60:40 ஆகும்.



- வரையறுக்கப்பட்ட மானியத்தில், குடிநீர் விநியோகம், நீர்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு பணிகள் மற்றும் கழிவுப்பொருட்கள் மறுசுழற்சி பணிக்காக 30 சதவீதமும், மீதமுள்ள 30 சதவீதம் சுகாதாரப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.
- வரையறுக்கப்படாத மானியம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் தவிர அரசு அனுமதித்துள்ள இதர குறிப்பிட்ட பணிகளுக்காக உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் பயன்படுத்தலாம்.

பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளுக்கும் கிடைமட்டமாக (Horizontal Sharing) பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு செங்குத்து (Vertical Sharing) விகிதாச்சார பகிர்வு பின்பற்றப்படுகிறது.

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 5% |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 15% |
| கிராம ஊராட்சிகள் | 80% |

15–வது ஒன்றிய நிதிக்குழு மானிய ஒட்டுமொத்த காலத்திற்கு கீழ்கண்டவாறு மூன்றடுக்கு முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | கிராம ஊராட்சி | வட்டார ஊராட்சி | மாவட்ட ஊராட்சி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2020–21 | 2885.60 | 541.05 | 180.35 | 3607.00 |
| 2021–22 | 2132.80 | 399.90 | 133.30 | 2666.00 |
| 2022–23 | 2208.80 | 414.15 | 138.05 | 2761.00 |
| 2023–24 | 2232.80 | 418.65 | 139.55 | 2791.00 |
| 2024–25 | 2365.60 | 443.55 | 147.85 | 2957.00 |
| 2025–26 | 2307.20 | 432.60 | 144.20 | 2884.00 |
| **மொத்தம்** | **14132.80** | **2649.90** | **883.30** | **17666.00** |



**ஆ) 15 வது நிதிக்குழு ஆணையத்தின் சுகாதார மானியத்தின் கீழ் சுகாதாரத் துறைக்கான கட்டிடங்கள் கட்டுதல்**

15வது நிதிக் குழுவின் கீழ் சுகாதார மானியங்கள் கீழ்மட்ட அளவில் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்த உதவுகின்றன.

மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளை இறுதி வரை வழங்குவதற்கு உறுதி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இப்பணிகளுக்கான கட்டுமானத்தை மேற்கொள்கிறது.

இம்மானியத்தினைப் பயன்படுத்தி மாநிலத்தில் துணை சுகாதார மையங்கள், வட்டார பொது சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என மூன்று வகையான சுகாதார கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

2021–22 முதல் 2023–24 வரை அனுமதிக்கப்பட்ட சுகாதார கட்டிடங்களின் விவரங்கள் பின்வருமாறு: –

| வருடம் | அனுமதிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | சுகாதார துணை மையங்கள் | ஒன்றிய சுகாதார அலகுகள் | ஆரம்ப சுகாதார நிலையங்கள் | மொத்தம் |
| 2021–22 | 169 | 68 | 13 | 250 |
| 2022–23 | 120 | 68 | 13 | 201 |
| 2023–24 | 122 | 38 | 64 | 224 |
| **மொத்தம்** | **411** | **174** | **90** | **675** |

**2.5 சொந்த வருவாய் இனங்கள்**

**1. வரி வருவாய்**

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172–ன்படி வீட்டு வரி வசூல் செய்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவு 172–ல் வீட்டு வரி என்ற



சொற்றொடர் திருத்தச் சட்டத்தின் மூலம் சொத்து வரி என மாற்றப்பட்டுள்ளது.

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198 (B)–ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகையுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும்.

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172, 220 மற்றும் பிரிவு 242–ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன.

**2. வரியில்லா வருவாய்**

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியில்லா வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள். இவ்வரி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (6வது திருத்தம்–2024) வணிக உரிமமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

ix) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

x) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xi) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை



## 2.6 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

பதிவுத் துறையின் மூலம் வசூலிக்கப்படும் முத்திரைக் கட்டணத்தின் மீதான கூடுதல் கட்டணத் தொகையிலிருந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட வருவாய்கள் மாநில அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அதன்படி அரசு, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி முத்திரைக்கட்டணத்தின் மீதான கூடுதல் கட்டணங்கள் வருவாயிலிருந்து வசூலிக்கப்பட்ட வருமானத்திலிருந்து கீழ்க்கண்டுள்ளவாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

1. மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கு (1/3) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2. மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு (2/3) கிராமப்புறங்களில் முன்னுரிமை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.7 சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விருதுகள் வழங்குதல்:**

**அ. உத்தமர் காந்தி விருது**

கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சியின் முன்னேற்றத்திற்காக திட்டமிடலில் துவங்கி, தேவையான ஆதாரங்களை திரட்டுதல், தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல், அரசு திட்டங்களைச் செயல்படுத்துதல் வரையிலான பல்வேறு பணிகளை மேற்கொண்டு ஒட்டுமொத்தக் கிராம வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார். கிராம ஊராட்சித் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவும், கிராம ஊராட்சியின் செயல் அலுவலராகவும் இருந்து, பொது மக்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும் முக்கிய



இணைப்புப்பாலமாக விளங்குகிறார். எனவே ஊராட்சியின் மேம்பாடானது பெரும்பாலும் கிராம ஊராட்சித் தலைவரின் தலைமைத்துவத்தினையும், நிர்வாகத்திறன் மற்றும் அறிவுக்கூர்மையையும் பொறுத்து, அரசின் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும் அத்திட்டங்களினால் ஏற்படும் நன்மைகளை கடைக்கோடி வரை கொண்டு சேர்ப்பதிலும் முக்கிய மையப்புள்ளியாக உள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவை விதிகள் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி 2022ஆம் ஆண்டிலிருந்து "உத்தமர் காந்தி விருது" மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சியின் மேம்பாட்டிற்காகவும், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் முன்னின்று வழிநடத்தும் கிராம ஊராட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்விருது 2006 முதல்

2010 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது

அரசாணை (நிலை) எண்.114, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–2) துறை, நாள்: 11.10.2022ன்–படி இவ்விருது, சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ரூ. 10 இலட்சம் ரொக்கப்பரிசுடன் வழங்கப்படும். விருதுக்கு தகுதியான கிராம ஊராட்சியின், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சிறப்பாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட குறியீடுகளையும் மற்றும் அதன் செயல்திறன்களை அளவிடுவதை பொறுத்து தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களை அங்கீகாரப்படுத்துவதன் மூலம் இவ்வூராட்சியில் நடைபெற்ற சிறப்பான பணிகள் பிற ஊராட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் முன்



மாதிரியாக அமைவதோடு அவ்வூராட்சிகளும் மேம்பாடு அடைய ஊக்கப்படுத்துகிறது.

**ஆ, சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருதுகள்:**

அரசுசாரா தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை சமூக நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக மேற்கொண்டு வருகின்றன. பெருநிறுவனங்கள் தங்களுடைய நிகர லாபத்தில் 2% நிதியினை சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திட நிறுவனங்கள் சட்டம் 2013 மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டிற்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருது உருவாக்கப்பட்டது. இவ்விருதுகள் சிறப்பாக செயல்படும்

பெருநிறுவனங்களுக்கு 2010 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டது. தற்போது, ஊரகப் பகுதிகளில் சமூக மற்றும் ஊரக மேம்பாட்டிற்காக சிறப்பாக செயல்படும் பெரு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அங்கீகரிக்கும் விதமாக, சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் பெரு நிறுவனங்களுக்கான விருதுகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–2) துறை, நாள்.6.7.2022ன்படி ஒவ்வொரு ஆண்டும், மாவட்டம் தோறும் சிறப்பாக செயல்படும் ஒரு பெரு நிறுவனம் / தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு விருதுடன், ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கப்பரிசும் கேடயமும் வழங்கப்படும்.

**இ, தேசிய பஞ்சாயத்து விருது**

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் பின்வரும் பிரிவுகளின் கீழ் பல்வேறு முன்னுரிமைத் துறைகள்/கருப்பொருள்களின் கீழ், விருது பெற்ற



பஞ்சாயத்துகளுக்கான நிதிச் சலுகைகள் உட்பட, சிறப்பாகச் செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு 'தேசிய பஞ்சாயத்து விருதுகள்' வழங்கப்படுகின்றன.

1. தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (DDUPSV)

(தனிப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளின் செயல்திறனுக்காக)

2. நானாஜி தேஷ்முக் சர்வோத்தம் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (NDSPSV)

(அனைத்து நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளின் செயல்திறனுக்காக)

3. பசுமை முன்முயற்சி தொடர்பான சிறப்பு வகைகள்,

அ) கிராம ஊர்ஜா ஸ்வராஜ் விஷேஷ் பஞ்சாயத்து புரஸ்கார்

ஆ) கார்பன் நியூட்ரல் விஷேஷ் பஞ்சாயத்து புரஸ்கார்

தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் பிரிவின் கீழ், கோவை மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பிச்சனூர் ஊராட்சியானது, நல் ஆளுமைக்கான தேசிய அளவில் முதல் பரிசு பெற்றுள்ளது.

**2.8 புதிய முயற்சிகள்:**

**அ) ஊராட்சி வளர்ச்சி குறியீடு:**

ஊராட்சிகள் மூலம் கிராமப்புறங்களில் அனைத்து நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளின் முன்னேற்றத்தின் அளவீட்டினை மதிப்பிடுவதற்காக ஊராட்சி வளர்ச்சி குறியீடு உருவாக்கப்பட்டது.

ஊராட்சி வளர்ச்சி குறியீடானது, நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கான ஆதார அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்குவதற்கு சார்பு அமைச்சகங்கள்/மாநில அரசுகள் மற்றும்



ஊராட்சிகளுக்கு தகுந்த வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குகிறது.

மாநிலத்திற்கான ஊராட்சி வளர்ச்சி குறியீடானது 574 உள்ளூர் குறிகாட்டிகளில் 9 கருப்பொருள்கள், 138 உள்ளூர் இலக்குகள் மற்றும் 638 தனிப்பட்ட தரவுப் புள்ளிகளின் அடிப்படையில் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளின் முன்னேற்றங்கள் கணக்கிடப்படுகின்றன. ஊராட்சி அளவில் பெற கூடிய தரவுகளும் ஒவ்வொரு தரவு மூலமும் அறிக்கையில் அடையாளம் காணப்படுகின்றன.

உள்ளூர் குறியீட்டு ஆதாரங்கள் மூலம் மதிப்பெண்களின் அடிப்படையில், கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு கருப்பொருள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளுக்கான மதிப்பெண்களைப் பெறுகின்றன:-

- A+ சாதனையாளர் (90-க்கு மேல்)
- A முன்னணி பெறுபவர் (75 முதல் 90 வரை)

- B செயல்திறனாலர் (60 முதல் 75 வரை)
- C ஆர்வலர் (40 முதல் 60 வரை)
- D ஆரம்ப நிலையாளர் (0 முதல் 40 வரை)

**ஆ, கிராம ஊராட்சிகளில் இணையவழி வரி வசூல் (VPTAX)**

www.vptax.tnrd.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் கிராம ஊராட்சிகளில் வசூலிக்கப்படும் வரிகள் மற்றும் இதர கட்டணங்களை இணைய வழி மூலம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 1.44 கோடி வீடுகளின் விவரங்கள் மேற்படி இணையதளத்தில் உள்ளிடப்பட்டு வரி வசூல் செய்வதற்கு உதவும் வகையில் 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் POS இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



**இ, தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு (TNPASS)**

தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 11 வகையான வங்கி கணக்குகள் PFMS மூலம் இயங்கி வந்தன. தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு அமைப்பு (TNPASS) கிராம ஊராட்சிகளின் நிதி பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கிராம ஊராட்சிகளில் கணக்குகளை கையாளுதல் ஒரே செயலியின் மூலம் ஒன்றாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளதால் கிராம ஊராட்சிகளில் விரைவான பரிவர்த்தனைகள் மற்றும் சேவைகள் வழங்க உதவுகிறது.

**ஈ, ஒற்றைச்சாளர முறை–மனைப்பிரிவு மற்றும் கட்டிட அனுமதி இணைய வழி மூலம் வழங்குதல் (Online PPA)**

கிராம ஊராட்சி பகுதிகளில் மனைப்பிரிவு மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேற்படி ஒற்றைச் சாளர முறை இணைய தளம் மூலம் கிராம

ஊராட்சி அமைப்புகளால் கட்டிட மற்றும் மனைப்பிரிவு ஒப்புதலுக்கான விண்ணப்பங்களை பெறுவதற்கும் செயலாக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.



# 3. மாநில அரசுத் திட்டங்கள்

## 3.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு 2006 முதல் 2011 முடிய செயல்படுத்தப்பட்ட ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டமானது அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சியிலும் குளங்கள் புதுப்பித்தல், அறைகலன்கள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய ஊரக நூலகங்கள் அமைத்தல், புதிய இடுகாடு / சுடுகாடு மற்றும் பழைய இடுகாடு / சுடுகாடுகளில் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சமுதாய / பள்ளி விளையாட்டு மையங்கள் தேவையான விளையாட்டு

உபகரணங்களுடன் அமைத்தல் போன்ற கட்டாய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் ஊரகப் மக்களிடையே ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை சீரான நிலையில் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021–22 முதல் 2025–26 முடிய ஐந்து ஆண்டுகளில் கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அனைத்து குக்கிராமங்களில் வாழும் மக்களுக்கு தேவைப்படும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களுடன் ஏறத்தாழ 16 துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஊரக மக்களுக்கு



சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3.1.1 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–IIன் கீழ் ஒவ்வொரு ஆண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

**1. நிதி ஒதுக்கீடு**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–IIன் கீழ் குறைந்த பட்ச அடிப்படை நிதியாக தலா ரூபாய் 30 இலட்சமும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூபாய் 5 இலட்சமும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படுகிறது. மக்கள் தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியன கணக்கீடு செய்யப்பட்டு குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள் தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படுகிறது.

செயல் திறன் ஊக்க நிதியானது குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் உத்தேச காரணிகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2. ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு**

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, ஊராட்சியின் தலைவர், ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கொண்ட உள்ளூர் குழுவின் மூலம் ஆய்வு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், பணிகள் மூன்று விரிவான இனங்களின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. (1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகள் (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் இதர துறைகளின் திட்டங்களை செயல்படுத்தப்படும் பணிகள்.



**3. திட்டக் கூறுகள்:**

**அட்டவணை 3.1**

| வ. எண் | பணியின் வகைகள் |
|---|---|
| 1. | குளங்கள்/ஊருணிகள் புனரமைத்தல் |
| 2. | பொது பயன்பாட்டு கட்டடங்கள் |
| 3. | சமத்துவ சுடுகாடு / இடுகாடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் |
| 4. | தெருக்கள் / வீதிகள் மேம்படுத்துதல் |
| 5. | தெருவிளக்குகள் |
| 6. | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் |

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 2657 கிராம ஊராட்சிகள், ரூ.1455 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேர்தெடுக்கப்பட்டுள்ளது. 2022–23 ஆம் ஆண்டில் 2544 கிராம ஊராட்சிகள், ரூ.1155 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2023–24 ஆம் ஆண்டில் 2504 கிராம ஊராட்சிகள் ரூ.1148 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2024–25 ஆம் ஆண்டில் 2482

கிராம ஊராட்சிகள் ரூ.1147.28 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 3.2

## 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வ. எண் | பணியின் வகைகள் | 2021-22 | | 2022-23 | | 2023-24 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) |
| 1. | நீர் நிலைகள் புதுப்பித்தல் | 2200 | 216.25 | 1753 | 161.64 | 1672 | 150.80 |
| 2. | குக்கிராமங்களில் தெருக்கள்/ வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 9524 | 451.18 | 6910 | 348.16 | 7080 | 369.76 |
| 3. | சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட | 892 | 46.87 | 548 | 29.25 | 607 | 34.92 |



| வ. எண் | பணியின் வகைகள் | 2021-22 | | 2022-23 | | 2023-24 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த பணிகள் (எண்ணிக்கையில்) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) |
| | இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் | | | | | | |
| 4. | பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல் | 4250 | 302.91 | 2887 | 248.46 | 3055 | 222.17 |
| 5. | பசுமை மற்றும் சுத்தமான கிராமம் | 2891 | 118.31 | 2213 | 82.32 | 1545 | 72.32 |
| 6. | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஒருங்கிணைத்தல் | 2368 | 153.95 | 1865 | 129.79 | 1804 | 146.80 |

## 3.2 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஊரக நூலகங்கள் புதுப்பித்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை எண்.11 விதிகள் 243G மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111ல் கிராமங்களில் நூலகங்கள்/வாசிப்பறைகளை திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளன. அதன் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2006-07 முதல் 2010-11 முடிய 12,618 ஊரக நூலகங்கள் துவங்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் பராமரிப்புப்பணி மேற்கொள்ளப்படாத காரணத்தால், பெரும்பாலான நூலகங்கள் முழுமையாக இயங்கவில்லை.



**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஊரக நூலகங்களை புதுப்பிக்க வேண்டி திட்ட செயலாக்கம் தீட்டுதல்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஊரக நூலகங்களை புனரமைக்க அரசு ஆணையிட்டது. நூலக கட்டிடங்களை புதுப்பித்தல் மற்றும் பழுதுப்பார்த்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், பழுதுபட்ட, பயன்படுத்த இயலாத அறைகலன்களை மாற்றுதல் மற்றும் கூடுதலான புத்தகங்கள் வழங்குதல் உள்ளிட்டவை மேற்கொள்ளப்படும்.

2021-22 ஆம் ஆண்டில் 4116 நூலகங்கள் ரூ.91.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் 3679 நூலகங்கள் ரூ.84.27 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டில், 4386 நூலகங்கள் ரூ.96.84 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

## 3.3 வீட்டு வசதி திட்டங்கள்

### 3.3.1 கலைஞரின் கனவு இல்லம்

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேம்பட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு மீதான உரையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

*"இருப்பத்தியோராம் நூற்றாண்டிலும், இன்றளவும் கிராமப் பகுதிகளில் வறுமையின் அடையாளமாக எஞ்சியிருப்பவை குடிசைகளே, குடிசைகளில் வாழ்ந்திடும் குடும்பங்கள் பாதுகாப்பான நிரந்தர வீடுகளுக்கு இடம்பெயரும்போது, ஏற்றத்தாழ்வு கொண்ட இந்தச் சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையுடன் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கிடைக்கும் பெரும் வாய்ப்பாகவே அது அமைந்திடும். இவற்றை எல்லாம் உணர்ந்துதான், நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2010 ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை*



*எய்திடும் வகையில் கலைஞரின் வீடு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் குடிசைகளை மாற்றி அனைவருக்கும் பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்துத் தரும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட சமீபத்திய கணக்கெடுப்பின்படி, கிராமப்பகுதிகளில் ஏறத்தாழ எட்டு இலட்சம் குடிசை வீடுகளில் மக்கள் வாழ்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.* ***"குடிசையில்லா தமிழ்நாடு"*** *என்ற இலக்கினை எய்திடும் வகையில், வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகள் ஆறு ஆண்டுகளில் கட்டித் தரப்படும். முதற்கட்டமாக, 2024–25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் ஒவ்வொன்றும் 3.50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். தேர்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் சொந்தமாக வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குவதுடன், வீடு கட்டுவதற்கான தொகை அவர்தம் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படும். அறிவியில்பூர்வமான கணக்கெடுப்பு, வெளிப்படையான பயனாளிகள் தேர்வு முறை, தங்கள் கனவு இல்லங்களை*

*பயனாளிகள் தாங்களே உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பு என குறிப்பிடத்தக்க அம்சங்களைத் தாங்கிய* ***இப்புதிய திட்டம் 'கலைஞரின் கனவு இல்லம்' என்ற பெயரில் வரும் நிதியாண்டில் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்***.

**அலகுத் தொகை மற்றும் இலக்கு:**

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.3.50 லட்சம் ஆகும். இதில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், 90 மனிதசக்தி நாட்களுக்குரிய தினக்கூலித் தொகை வீடு கட்டுவதற்கும் மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை (IHHL) கட்டுவதற்கு 10 மனிதசக்தி நாட்களுக்குரிய தினக்கூலித் தொகையும் அனுமதிக்கப்பட்ட அலகுத் தொகை ரூ.3.50/– இலட்சத்திற்கு உட்பட்டதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிக்கு ஏற்கனவே கழிப்பறை கட்டிட அனுமதி வழங்கப்படாமல் இருந்தால் தூய்மை இந்தியா இயக்கம் – ஊரகம் (SBM – G) மூலம் தனிநபர் வீட்டுக் கழிப்பறை (IHHL) கட்டிட ரூ.12,000/–



வழங்கப்படும்.

**சிறப்பம்சங்கள்:**

- வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு, சமையலறை உட்பட 360 சதுர அடியாக இருத்தல் வேண்டும். அதில் 300 சதுர அடி சிமெண்ட் கான்கிரீட் கூரையால் அமைக்கபபட்டிருக்க வேண்டும், மீதமுள்ள 60 சதுர அடி சிமெண்ட் கான்கிரீட் அல்லது பயனாளியின் விருப்பப்படி தீப்பிடிக்காத வகையிலான கூரையாக இருக்கலாம்
- மலைப்பகுதிகளாக இருப்பின் பயனாளியின் விருப்பத்திற்கு ஏற்ப மேற்கூரை அமைக்கலாம்.
- எந்நிலையிலும் ஓலை மற்றும் அஸ்பெஸ்டாஸ் தகட்டினால் கூரை அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான தொழில்நுட்பங்கள் மற்றும் விரைவான

கட்டுமான முறை ஆகியவை அனுமதிக்கப்படும்.

- வீடுகளை பயனாளிகள் தாங்களே கட்டிக் கொள்ளலாம்.
- மாநில அளவிலான ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கு (STATE SINGLE NODAL ACCOUNT) மூலம் தவணைத்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். கூடுதலாக பயனாளிகள் விரும்பினால் வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் சுய உதவி குழுக்கள் வாயிலாக ரூபாய் ஒரு இலட்சம் வரை நிறுவன கடன்களை பெற்றுக்கொள்ளலாம்.

**திட்ட செயலாக்கம்**

2024-25 ஆம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படும்.



### 3.3.2 ஊரகப்பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது பார்த்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.02.2024 அன்று சட்டப் பேரவையில்,

*"தமிழகத்தில் 2001-ஆம் ஆண்டுக்கு முன்பாக பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் ஏறத்தாழ 2.50 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன. கிராமப்புற விளிம்பு நிலை மக்களுக்காக கட்டப்பட்ட அந்த வீடுகள் ரூ.2,000 கோடியில் அடுத்த இரண்டு **ஆண்டுகளில்** பழுதுபார்த்து புனரமைக்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.*

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மூலமாக அனைத்து கிராம ஊராட்சிகளிலும், பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு, "ஊரக வீடுகள் பழுதுபார்த்தல்" என்ற பெயரில் ஒரு

கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையால் உருவாக்கப்பட்ட " ஊரக வீடுகள் பழுதுபார்த்தல் " எனும் இணைய அடிப்படையிலான செயலி மூலம் மேற்கண்ட கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இக்கணக்கெடுப்பில், 2000-01-ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் மற்றும் சாய்வுதள கான்கிரீட் வீடுகள் என மொத்தம் 2,57,006 வீடுகள் தகுதியானவை என கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் அனைத்தும் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால், இவை உடனடியாக பழுது நீக்கம் செய்ய தகுதியானவையாக உள்ளன.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் 2000-01ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளை, ரூ.1954.20 கோடி மதிப்பீட்டில், 2024-25 மற்றும் 2025-26 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பழுதுபார்க்கும் பொருட்டு



"ஊரக வீடுகள் பழுதுபார்த்தல் (RRH) திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**அலகுத் தொகை :**

இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி குறித்த விவரம் பின்வருமாறு,

ஓட்டு வீடுகளுக்கு,

| வ. எண் | பழுது நீக்கத்தின் வகை | அனுமதிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை | |
|---|---|---|---|
| | | சமவெளிப் பகுதிகளுக்கு | மலைப்பகுதிகளுக்கு |
| 1 | சிறு பழுது | ரூ.32,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) | ரூ.42,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) |
| 2 | பெரும் பழுது | ரூ.70,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) | ரூ.92,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) |

சாய்வுதள கான்கிரீட் வீடுகளுக்கு,

| வ. எண், | பழுது நீக்கத்தின் வகை | அனுமதிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை | |
|---|---|---|---|
| | | சமவெளிப் பகுதிகளுக்கு | மலைப்பகுதிகளுக்கு |
| 1 | சிறு பழுது | ரூ.55,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) | ரூ.72,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) |
| 2 | பெரும் பழுது | ரூ.1,50,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) | ரூ.1,85,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ) |

மாநில அளவிலான வங்கிக் கணக்கிலிருந்து (STATE LEVEL SINGLE NODAL ACCOUNT) பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்படும்.

**நிதி அனுமதி:**

2024-2025 ஆம் ஆண்டில், ரூ.1041.32 கோடி மதிப்பீட்டில் 1,48,634 வீடுகளை சீரமைக்க அரசால் நிதி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



### 3.3.3 புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல்

இந்திய சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சமூக நீதியை மேம்படுத்தவும் தந்தை பெரியாரின் சமூக சமத்துவச் செய்தியைப் பரப்பவும் தமிழ்நாடு அரசு 1997-98 ஆம் ஆண்டு "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டத்தினை தொடங்கியது. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் சாதி, மத வேறுபாடுகள் இன்றி, ஒன்றாக வாழ வழிவகுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் 238 சமத்துவபுரங்கள் இரண்டு கட்டங்களாகக் கட்டப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட அனைத்து சமத்துவபுரங்களும் 2021-22 மற்றும் 2022-23-ஆம் ஆண்டுகளில், இரண்டு கட்டங்களில் சீரமைக்கப்பட்டன.

**புதிய சமத்துவபுரங்கள்:**

"பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் எட்டு சமத்துவபுரங்கள்

புதிதாகக் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**சிறப்பு அம்சங்கள்**

- சமத்துவபுரம் 9 முதல் 10 ஏக்கர் நிலப்பரப்பில் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு நிறுவப்படும்.
- ஒவ்வொரு சமத்துவபுரமும் 100 வீடுகளைக் கொண்டிருக்கும் (ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவைக் கொண்டது),
- சமத்துவபுரத்தில் தேவைப்படும் உட்கட்டமைப்புகளான சாலைகள், குடிநீர் வசதி, தெருவிளக்குகள் மற்றும் பொது விநியோகக் கடை, சமுதாயக் கூடம், நூலகக் கட்டிடம், பள்ளிக் கட்டிடம், பள்ளிக் கழிவறை, அங்கன்வாடி, விளையாட்டு மைதானம், பூங்கா போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.



- மேற்குறிப்பிட்ட வசதிகள் தவிர சமத்துவபுரத்தில் நுழைவாயில் வளைவு மற்றும் பெரியார் சிலை அமைக்கப்படும்.

**3.3.4 மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் மற்றும் மீளக்கட்டுதல்**

2023 ஆம் வருடம் டிசம்பர் மாதம் முதலாவது வாரத்தில் மிக்சாங் புயலின் தாக்கத்தினால் வீடுகளை இழந்த செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த கிராமப்புற ஏழை மக்களுக்கும், 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில், தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில், அதி கனமழை பெய்ததால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த கிராமப்புற ஏழை மக்களுக்கும் உடனடியாக உதவிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2023 அன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில்,

*"ஊரக வளர்ச்சித் துறை மூலம் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாகக் கட்டுவதற்கு ரூ.4 இலட்சம் வழங்கிடவும். பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு தலா ரூ.2 இலட்சம் வரை வழங்குவது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம். செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 385 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4577 புதிய வீடுகள் கட்டப்படும் மற்றும் 9975 வீடுகளுக்கு பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முழுவதும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்." என அறிவிக்கப்பட்டது.*

**நிதி அனுமதி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது செய்திக்குறிப்பின் அடிப்படையில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பகுதியாக சேதமடைந்த வீடுகள்



பழுதுபார்த்தல் மற்றும் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை மீளக் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.382.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அலகுத்தொகை**

இந்த சிறப்பு செயலாக்க திட்டத்தின் கீழ் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.4 இலட்சமும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளை சீரமைக்க ரூ.2 இலட்சம் வரையிலும் நிதி வழங்கப்படும்.

**முக்கிய அம்சங்கள்**

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்,

- வீடுகளின் அளவு 400 சதுர அடி இருத்தல் வேண்டும்.
- வீடுகளின் சுவர்களை செங்கல், நிலக்கரி சாம்பல் கலந்த கற்கள், சிமெண்ட் கான்கிரீட் கற்கள், இன்டர் லாக்கிங் கற்கள் மற்றும் ஏஏசி கற்கள்

பயன்படுத்தி சிமெண்ட் சாந்தினால் சட்டக அமைப்புடன் (framed structure) கட்டுதல் வேண்டும்.

- ➢ எந்த சூழ்நிலையிலும் மண் சாந்து உபயோகித்தல் கூடாது. மண் சுவர்கள் கட்டுதல் முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது.
- ➢ பயனாளியின் விருப்பதிற்கேற்ப மேற்கூரை அமைக்கலாம். அது கான்கிரீட்/ பஃப் பேனல்கள் /ஓடுகளாகவும் இருக்கலாம்.
- ➢ கிராம ஊராட்சிகள், பயனாளி வீட்டினை கட்டுவதற்கு தேவைப்படும் உதவிகளை வழங்க வேண்டும்.
- ➢ தகுதியான பயனாளிகளுக்கு தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறை (IHHL) வழங்கப்படும்.
- ➢ மாநில அளவிலான வங்கிக் கணக்கிலிருந்து (STATE LEVEL SINGLE NODAL ACCOUNT) பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தவணைத்தொகை விடுவிக்கப்படும்.



### 3.3.5 இதர துறைகளுக்கான வீட்டு வசதி திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வீட்டு வசதி திட்டங்கள் தவிர, இத்துறையின் மூலம் சிறப்பு பிரிவினர்களான அதாவது இலங்கை தமிழ் அகதிகள் மற்றும் பழங்குடியினர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

**அ. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வீடுகள்:**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையால் கட்டம் –Iல், 19 மாவட்டங்களில் உள்ள 32 மறுவாழ்வு முகாம்களில் 3,510 வீடுகள் கட்டுவதற்கு ரூ.175.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, அனுமதிக்கப்பட்ட பணிகள் அனைத்தும் முடிவுறும் நிலையில் உள்ளது. கட்டம்–IIல், 15 மாவட்டங்களில் உள்ள 36 மறுவாழ்வு முகாம்களில் 3,919 வீடுகள் கட்டுவதற்கு ரூ.228.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. பழங்குடியினருக்கான வீடுகள்:**

பழங்குடியினர் நலத்துறையால் 2022–23 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில், 3881 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 176.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ள நிலையில், விரைவில் முடிக்கப்படும்.

பயனாளிகளுக்கான பட்டியல் தொகை நேரிடையாக அவர்களது வங்கி கணக்கிற்கு செலுத்தப்படும்.

**3.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **1997–98** ஆம் ஆண்டில் ஒரு தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் சட்டமன்ற தொகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்வதற்காக தொடங்கப்பட்டது,



இத்திட்டம் தமிழ்நாடு அரசால் முழுமையாக நிதியளிக்கப்படும் திட்டம் ஆகும் இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஆண்டுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.3.00 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2022–23 ஆம்** ஆண்டில், அரசால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குறித்த காலத்தில் பணிகளைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில், 22 % ஆதிதிராவிடர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) மக்கள் அதிகம் வசிக்கும் கிராமப்புற பகுதிகளுக்கும், நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த ஒவ்வொரு ஆண்டும்

**234** சட்டமன்ற தொகுதிகளுக்கு மொத்த ஒதுக்கீடாக ரூ.702 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2024–25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ரூ.702 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து, விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

**3.5 நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)**

மக்களின் பங்கேற்புடன் பொது சொத்துகளை உருவாக்குவதை ஊக்குவிக்க நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் **1997–98** ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. ஊரக மக்களின் சுய உதவி மற்றும் சுய சார்பு எண்ணத்தை ஊக்குவித்தல் மற்றும் வலிமைப்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், வணிக நிறுவனங்கள் அல்லது உள்ளூர் மக்கள் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பை அளித்து நமக்கு நாமே திட்டத்தில் பணிகளை தேர்வு செய்யலாம். பொது



மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர், ஒப்பந்தப்புள்ளியின்றி, பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்கலாம். ஏற்கனவே உள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் செய்து, ஆதிதிராவிடர் (SC) / பழங்குடியினர் (ST) குடியிருப்புகளில், மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்புத் தொகையை ஒட்டுமொத்த பணியின் மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பங்காக **(1/5)** அரசால் குறைக்கப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மொத்த ஒதுக்கீடாக ரூ.100 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மேலும், 2023–24ஆம் ஆண்டில் இத்திட்டதினை செயல்படுத்த கூடுதல் நிதியாக ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ரூ.100 கோடிக்கு நிர்வாக அனுமதி

அளித்து, விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

### 3.6 ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

**ஊரக சாலைகள்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய காரணிகளான வர்த்தகத்தை எளிதாக்குதல், முதலீட்டை ஈர்த்தல், போக்குவரத்துச் செலவுகளைக் குறைத்தல், சுற்றுலாவை மேம்படுத்துதல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தைகளை அணுகுதல், நகரமயமாக்கலை ஊக்குவித்தல், அத்தியாவசிய சேவைகளை அடைதல், துறைகளை ஒருங்கிணைத்தல், உறுதி மற்றும் நம்பகத்தன்மை போன்றவற்றில் இணைப்பு சாலைகள் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரு மாநிலத்தின் சாலை தொகுப்பில், கிராமப்புர சாலைகள் இறுதி இணைப்பிணை வழங்குகின்றன. கிராமப்புற சாலைகள் மீதான முதலீடு சமூக–



பொருளாதார காரணிகளான கல்வி, சுகாதாரம், விவசாயம், சந்தைப்படுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துகிறது. சாலைகள் கிராமப்பு வளர்ச்சியின் இன்றியமையாத கூறுகளாகும். எனவே, "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கிராமப்புற சாலைகளை மேம்படுத்த இந்த அரசு சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. சாலைகள் தொடர்புடைய சில செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. சாலை இணைப்பு வசதியில்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி, வணிகச்சந்தைகள், வாரச்சந்தைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் இணைப்புச் சாலைகள், பேருந்துகள் செல்லும் சாலைகள் மற்றும் உள் இணைப்புச் சாலைகள் ஆகியவற்றினை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துதல்.

2. ஊரகப்பகுதிகளில் விடுபட்ட ஊரகச்சாலைகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை ஊரகச்சாலைகள் தொகுப்பில் சேர்த்து ஊரகச் சாலைகளின் அடிப்படை விவரங்களை ஒருங்கிணைத்தல், மேலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு எண்ணெழுத்து இனவாரியான தனிச்சாலைக் குறியீடு (Road code) வழங்குதல்.
3. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்கான மாநில மற்றும் ஒன்றிய திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீட்டைஅதிகரித்தல்.
4. பல்வேறு பசுமை மற்றும் மாற்று தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாலைகள் அமைத்தல்.

ஊரகச் சாலைகளின் தொடர் வளர்ச்சி மற்றும் மாற்றத்தை கருத்தில் கொண்டு, கிராம ஊராட்சி



மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்படுத்தப்பட்ட முழுமையான தகவல்கள் tnrd.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | சாலையின் மேற்பரப்பின் வகை | கிராம ஊராட்சி சாலைகள் | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | தார்ச்சாலை | 74263 | 23123 | 97386 |
| 2 | சிமெண்ட்சாலை | 3237 | 392 | 3629 |
| 3 | ஈரடுக்குகப்பிச்சாலை | 1282 | 69 | 1351 |
| 4 | ஒரடுக்குகப்பிச்சாலை | 8547 | 342 | 8889 |
| 5 | சரளைக்கல்சாலை | 2486 | 112 | 2598 |
| 6 | மண்சாலை | 23106 | 850 | 23956 |
| | **மொத்தம்** | **1,12,921** | **24,888** | **1,37,809** |

ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, பல்வேறு திட்டங்களான முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

(MGSMT), நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD), பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்(PMGSY), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), உட்கட்டமைப்பு வசதிகள் நிதி(I&AF), உள்ளூர் திட்டமிடல் குழுமம் (LPA), கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.

**கடந்த 3 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலை மற்றும் பாலப் பணிகளின் திட்ட வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| வ. எண் | திட்டங்கள் | சாலைகள் | | | பாலங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீளம் (கிமீ) | தொகை (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
| 1. | முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 7465 | 9651.00 | 4000.00 | - | - |
| 2. | நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 287 | 551.76 | 424.85 | 342 | 1129.19 |
| 3. | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 935 | 4122.82 | 2692.29 | 83 | 320.97 |
| 4. | நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் சாலை மேம்பாடு | 2550 | 709.18 | 390.24 | - | - |
| 5. | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1360 | 1990.00 | 627.23 | - | - |
| **மொத்தம்** | | **12597** | **17024.76** | **8134.61** | **425** | **1450.16** |



## 3.7 முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

"முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்பாடு செய்ய ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல்/வலுப்படுத்துதல்/பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## முன்னுரிமை

பேருந்துகள் செல்லும் சாலைகள், ஒற்றை இணைப்பு கொண்ட குக்கிராமங்கள், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை இணைக்கும் சாலைகள், முக்கிய சுற்றுலா தலங்கள், புனித தலங்கள் மற்றும் பாரம்பரிய இடங்கள், சமூக பொருளாதார சேவைகளை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

## முக்கிய அம்சங்கள்

- ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலை தொகுப்பின் முழு விவரத்தினை அறிய வட்டார ஊரகச் சாலைத் திட்டம் (**Block Rural Road Plan**) தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு சாலைக்கும் தேர்ந்தெடுக்கப்படும் மதிப்பீட்டுக் காரணியின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளது.



- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மாநில திட்டங்களில், முதன் முதலாக சாலை மேம்பாட்டிற்கு பிறகு, அதன் ஒப்பந்ததாரரால் 5 ஆண்டு கால தொடர் பராமரிப்பு இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

- ஊரகச் சாலைகளை முறைப்படுத்தவும், அவற்றில் உள்ள சமமின்மையை நீக்கவும், முக்கிய கிராம ஊராட்சி சாலைகளான, பேருந்து செல்லும் சாலைகள், 3 கி.மீ நீளத்திற்கு மேற்பட்ட சாலைகள், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்டத்தின் முக்கிய சாலைகள் & பை–பாஸ் சாலைகள் மற்றும் முக்கிய சுற்றுலா தலங்கள், புனித தலங்கள் மற்றும் பாரம்பரிய இடங்கள், சமூக பொருளாதார சேவைகளை

இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகளாக மறுவகைப்படுத்தப்படும்.

- ஒரு புதுமையான முயற்சியாக, இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் அனைத்து சாலைகளுக்கும் பட்டைக் குறியீடு (QR code) கொடுக்கப்பட்டு, அக்குறியீடுகள் பெயர் பலகையிலும் இணைக்கப்பட்டுள்ளது. இக்குறியீடுகள் சம்பந்தப்பட்ட சாலையின் தற்போதைய நிலை, கடைசியாக மேம்படுத்தப்பட்ட ஆண்டு, மதிப்பீட்டுத் தொகை, சாலையின் நீளம் போன்ற முழு விவரங்களை வழங்குகிறது.

- தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்டத்தின் முக்கிய சாலைகளுடன் இணைக்கும் சாலைகளுக்கு, சாலைகள் இணையும்



இடத்தில், சாலைகளுக்கான சந்திப்பு மேம்பாடு (**Intersection Improvement)** மேற்கொள்ளப்பட்டுள்ளது. விபத்து நடக்கும் இடங்கள், கரும்புள்ளிப் பகுதிகள், பாதுகாப்பற்ற அமைப்பு கொண்ட சாலைகளில், வேகத்தடைகள், பாதுகாப்புத் தடைகள் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தார் சாலையின் மேற்பரப்பின் மீது பிரதிபலிப்பு கண்ணாடி மணிகளுடன் (reflect rising glass beads) கூடிய வெப்ப நெகிழி சேர்மம் (Thermoplastic compound) அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் சாலைகள், தனிப்பட்ட மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு முகமை மூலமாக ஆய்வு

மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் சாலைகளின் தரம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் அமைக்கப்படும் சாலைகளுக்கு இணையாக பராமரிக்கப்படுகிறது.

| வருடம் | எண்ணிக்கை | நீளம் (கி. மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2022-23 & 2023-24 | 7465 | 9651 | 4000.00 |

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்திற்கு 2024-25 - ஆம் ஆண்டில், ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.8 நபார்டு- ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி** (NABARD –RIDF):

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு



திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை ஒன்றிய அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நிதியில், 20% மாநில அரசால் நேரடியாகவும், மீதமுள்ள 80% மாநில அரசால் நபார்டு வங்கியின் கடனாகவும் பெறப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தேவையின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல் மூலம் ஊரக பகுதிகளில் அனைத்து பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- சாலை வசதி இல்லாத குக்கிராமங்களை இணைக்கும் வகையிலான சாலைகள், பேருந்துகள்/சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்குப் பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும்

சாலைகள், சுற்றுலா பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள், மருத்துவமனை, பள்ளி மற்றும் இதர சேவைகளை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2006-07 முதல் 2022-23 ஆம் ஆண்டுவரை, 19,063 கிமீ நீளத்திற்கு 8,146 சாலைகள் மற்றும் 510 உயர்மட்டப் பாலங்கள் ரூ.4325 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2023-24 ஆம் ஆண்டில், நபார்டு RIDF XXIX-ன் கீழ் ரூ.806 கோடி செலவில் 149 உயர்மட்ட பாலங்கள் மற்றும் 521 கிமீ நீளத்திற்கு 285 சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக 2023-24 ஆம் ஆண்டில், நாமக்கல் மாவட்டம் போதமலையில் அமைந்துள்ள



கீழூர், மேலூர் மற்றும் கெடமலை ஆகிய குக்கிராமங்களுக்கு 31 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் 139.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு RIDF XXIX திட்டத்தின் கீழ் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சாலை அமைப்பதன் மூலம் போதமலை பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக இம்மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளான கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை எளிதில் பெறமுடியும்.

### 3.8.1 நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் சாலை மேம்பாடு:

நகரங்கள் மற்றும் பேரூராட்சி பகுதியிலிருந்து 5 கி.மீ சுற்றளவில் உள்ள ஊராட்சிகளில் அதிக மக்கள் தொகையின் காரணமாக, அவ்வூராட்சிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகளின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளது. சமூக மற்றும் அன்றாட வாழ்வின் பல்வேறு அம்சங்களுக்கு இந்த

சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் முக்கிய பங்களிப்பதால், இவற்றை மேம்பாடு செய்வதின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

தமிழ்நாடு அரசு 690 கிராம ஊராட்சிகளை, நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளாக அடையாளம் கண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, **2023- 24** ஆம் ஆண்டில் **709** கி.மீ நீளமுள்ள **2550** சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகளை மேம்படுத்துவதற்காக ரூ.**390** கோடி நிதியை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் உள்ளூர் திட்டமிடல் குழுமம் ஆகியவற்றிலிருந்து ஒருங்கிணைத்து பெற அனுமதியளித்துள்ளது.

| வருடம் | எண்ணிக்கை | நீளம்(கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2023-24 | 2550 | 709.18 | 390.24 |



**3.8.2 வெள்ள சீரமைப்பு பணிகள்**

2023 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது, மிக்சாங் என பெயரிடப்பட்ட வெப்பமண்டல சூறாவளி, தமிழ்நாட்டின் வடகடலோர பகுதிகளில் கனமழையை ஏற்படுத்தியது. இதேபோல், தாமிரபரணி ஆற்றில் இருந்து வந்த அதிக உபரி நீருடன் பெய்த தொடர் கனமழையால் தென் கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இயற்கை சீற்றங்களால் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கடும் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.வெள்ள நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக, மேற்கண்ட 7 மாவட்டங்களில் பாதிப்படைந்த பகுதிகளில் உடனடி நிவாரண உதவிகளை மேற்கொள்ள ஊரக சாலைகளில் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர்,

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில், கடுமையாக சேதமடைந்த 985 சாலைகள் நிரந்தர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ. 176.82 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**3.9 பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)**

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்த, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, அரசுப் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் 21,136 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் (PUPS) மற்றும் 6,502 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் (PUMS) உள்ளன. இந்தப் பள்ளிகளில் 58,835 கட்டடங்கள் உள்ளன. மேற்கூறப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில்



உள்ளது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பழுதடைந்த நிலையில் இருந்த 2,745 கட்டடங்களை இடிக்க அரசு விரைவான நடவடிக்கை மேற்கொண்டது.

மேலும், 4,847 பள்ளிகளில் 13,157 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. புதிய வகுப்பறைகளுக்கான தேவை இடைவெளியை குறைக்க, இந்த அரசு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை கட்டுவதற்காக, 2022–23–ஆம் ஆண்டில் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2023–24 ஆம் ஆண்டில் ரூ.183.64 கோடி செலவில் 1,132 புதிய வகுப்பறைகள் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்,

நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நமக்கு நாமே திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.51.63 கோடி செலவில் 236 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் 472 வகுப்பறைகள் எடுக்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் நிதியாண்டில் முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்படாத பள்ளிக் கட்டிட பணிகள் நபார்டு திட்டம் மற்றும் மாநில நிதிக்குழு கூறு மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டடங்கள் பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கற்பித்தல் - கற்றல் சூழலை ஏற்படுத்தும் வகையில் இருக்கும். கற்றல் தொடர்பான தகவல்கள் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் ஓவியங்களாக வரையப்பட்டிருக்கும். பள்ளிக் கட்டடங்கள், போதுமான வெளிச்சம், சிறந்த காற்றோட்டம், பாதுகாப்பு அம்சங்கள், கவர்ச்சிகரமான



வண்ணமயமான வரைபடங்கள் மற்றும் படங்கள் போன்ற குழந்தை நேய வடிவமைப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

### 3.10 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS)

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) 2021-22-ல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க (PUPS) மற்றும் நடுநிலைப் (PUMS) பள்ளிகளில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டில் ரூ.60.63 கோடியில் 2,417 பழுது மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2024-25 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் உள்ள பள்ளிகள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.11 அரசு பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டம் (RBIOCGS)**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112 ன்படி தொடக்கப்பள்ளிகளை, பராமரித்தல் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல், மானியம் செலுத்துதல் உள்ளிட்ட கடமைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில், உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பதை உறுதி செய்வது ஊராட்சி ஒன்றியங்களின் சட்டபூர்வமான பொறுப்பாகும்.

2023–24 ஆம் ஆண்டில் அரசு பள்ளிகளின் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மை (RBIOCGS) திட்டத்தின் கீழ் ரூ.122.98 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும்



நடுநிலைப்பள்ளிகளில் 5,534 பழுது மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2023–24 ஆம் ஆண்டில் பள்ளிகளின் அரசு பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் (RBIOCGS) திட்டத்தின் கீழ் ரூ.42.12 கோடி மதிப்பீட்டில் 111 பள்ளி கட்டிடங்களில் 246 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

**3.12 ஊரகப்பகுதியின் நீர்நிலைகளை புதுப்பித்தல்**

சிறுபாசன ஏரி மற்றும் குளங்கள்/ஊரணிகள் ஆகியவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் பராமரிப்பில் உள்ளது. ஊரகப்பகுதியில் சுமார் 22,051 சிறுபாசன ஏரி மற்றும் 69,777 குளங்கள்/ஊரணிகள் உள்ளன. சிறுபாசன ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், குளங்கள்/ஊரணிகள் கிராம ஊராட்சிகளுக்கும் சொந்தமானது. இந்த நீர்நிலைகளை புதுபிப்பதன் மூலம் கொள்திறன்

அதிகரிக்கவும், நிலத்தடி நீர் மட்டம் உயரவும் மற்றும் உபரி நீர் வீணாவதை தடுக்கவும் காரணியாகிறது. சமூகக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூகபொறுப்புணர்வுடன், செயல்படும் நிறுவனங்கள் (CSR) மற்றும் கல்வி நிறுவனங்கள் நீர்நிலைகளை புதுப்பித்தல் பணிகளில் பெரிய அளவில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில், 5000 சிறு நீர்ப்பாசன ஏரிகள் ரூ.500 கோடி செலவில் புதுப்பிக்கப்படும். சிறுபாசன ஏரிகளை இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல், உபரி நீர்போக்கி, மதகு(கள்) போன்ற அனைத்து கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல் மேலும் இணைப்பு வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



**3.13 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி**

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி என்பது மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயின் ஒரு பகுதியாகும். இத்திட்டக்கூறு நிதிக்கான ஒப்படைக்கப்பட வருவாயில் குறிப்பிட்ட சதவீதம் தேவையின் அடிப்படையில் சிறப்பு உட்கட்டமைப்பு பணிக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்த 2007-08 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத் தாள் கட்டணத்துடன் வசூலிக்கப்படும் மிகுவரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய ஒப்படைக்கப்பட்ட வரிவருவாய் இனங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்து அதன் ஒருபகுதி ஊராட்சிகளுக்கும் மீதமுள்ள பகுதி அரசின் முதன்மைத் திட்டங்களுக்கும் பயன்படுத்திட அரசு உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டதன் காரணமாக, கேளிக்கை வரி முழுவதுமாக நீக்கம் செய்யப்பட்டது.

2021–22 ஆம் ஆண்டிலிருந்து, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாக கட்டடம், ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், எரிவாயு தகன மேடை, சாலைகள், பாலங்கள், பேருந்து நிலையம், மகாகவி பாரதியார் வாழ்வாதார பூங்கா போன்ற மொத்தம் 102 உட்கட்டமைப்பு பணிகள் ரூ.361 கோடி மதிப்பீட்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் கீழ், மொத்தம் ரூ.66.51 கோடியில் 729 வாகனங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.187 கோடி மதிப்பீட்டில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## 3.14 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்

**அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான, குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், இணைப்புச் சாலைகள் / தெருக்களை மேம்படுத்துதல், மயானத்தில் எரிமேடை / காத்திருப்போர் கூடம், அணுகு சாலை, விளையாட்டு மைதானங்கள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை செய்வதற்காக நிதியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்குகிறது. ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இத்திட்டத்திற்காக 2023–24 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கான அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரிவான சமூக–பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துகிறது.



# 4. ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

## 4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### 4.1.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006–ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது, இது ஒவ்வொரு நிதியாண்டிலும் திறன்சாரா உடலுழைப்பினை வழங்க முன்வரும் ஊரக குடும்பங்களுக்கு அதிகபட்சமாக 100 நாட்கள் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டமாகும்.

### 4.1.2. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. **பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:**

i. வேலை அட்டை பெறுவதற்கான உரிமை.

ii. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை.

iii. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை.

iv. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை

v. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
vi. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை
vii. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை
viii. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை
ix. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை
x. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது சமூக தொடர் சமூகத்தணிக்கை மேற்கொள்ளுதல்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் "பணி வாரம்" என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும்.



ஊராட்சிகளிலுள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் திருத்திய அட்டவணை–1–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப்பட்டியலின் படியான ஊதியமானது, ஓர் வயது வந்த நபர் ஒரு மணி நேரம் உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத்திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான அல்லது இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

6. அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப் புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கு திறன்சார் தொழிலாளர் ஊதியத்திற்கும் பொதுப் பணித்துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

7. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும் அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமைப் பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2022–லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் தொடர்ந்து பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8. 2017–18 ஆம் ஆண்டிலிருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும்



மின்னணு வருகைப்பதிவேடு (e–MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

9. தமிழ்நாட்டிற்கு, 1.4.2024 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி நாளொன்றுக்கு ரூ.319 என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

10. பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத்தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

11. பணிதளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

12. கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை

உறுதித் திட்டப்பணிகள் சமூகத்தணிக்கை செய்யப்படுகின்றன.

13. கிராமசபைக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்ந கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

14. வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணிநடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை வைக்கப்படுகிறது.

15. 68.76 இலட்சம் ஊரக குடும்பங்களில் உள்ள 79.39 இலட்சம் தொழிலாளர்களுக்கு 2023-24 வேலை வழங்கப்பட்டுள்ளது.



### 4.1.3. நிதி விடுவிப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி மூன்று முக்கிய கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)

2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)

3.அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவின கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

### 4.1.4 குறித்த காலத்திற்குள் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்

2023–24–ஆம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை நிலை I (T + 8 ) ஆகவும் மற்றும் நிலை II (T+9 – T+15) ஆகவும் ஒன்றிய அரசு திருத்தி வரையறுத்துள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத்தொகை 100 விழுக்காடு அவர்களது வங்கிக்கணக்குளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து பரிவர்த்தனைகளும் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne–FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.



### 4.1.5 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலை மூன்று பிரிவுகளின் கீழ் வழங்குகிறது. அட்டவணை–1–ல் குறிப்பிட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு மூலம் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 266 பணிகளில் 58 பணிகள் இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 150 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும். 58 பணிகள் ஊரக உட்கட்டமைப்பு பணிகள் ஆகும்.

**4.1.6 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் இயற்கை வள மேலாண்மை பணிகள்/விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்**

இயற்கை வள மேலாண்மை பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் முக்கிய இலக்காகும். அதன்படி, பசுமை மற்றும் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளாக பெருமளவு மரக்கன்று நடுதல் மற்றும் சாலையோர மரக்கன்று நடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தடுப்பணைகள், மீள் நிரப்பு குழிகள், கசிவு நீர்க்குட்டைகள், அகழிகள், பண்ணைக்குட்டைகள், உறிஞ்சுக்குழிகள் ஆகிய செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்புகள் அமைப்பதன் மூலம் நிலத்தடிநீர் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரத்துக்கால்வாய் மற்றும் பாரம்பரிய நீர்நிலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு அவை முழு



கொள்ளளவை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு (ஊரக வளர்ச்சி அமைச்சகம்) வெளியிட்ட நீர் பாதுகாப்பு இயக்கத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 60% செலவினம் வேளாண்மை மற்றும் வேளாண் சார் பணிகளுக்கு அனைத்து வட்டாரங்களுக்கும் செலவிட வேண்டும் மற்றும் நீர் பாதுகாப்பு மேலாண்மைக்கான வட்டாரங்களில் 65% செலவினம் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும் மேற்கொள்ள வேண்டும்,.

தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளை குறிப்பாக நீர் பற்றாக்குறை வட்டாரங்களில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்துகிறது. 2023-24 ஆம் ஆண்டில் 2,88,769 இயற்கை வள மேலாண்மை பணிகள் எடுக்கப்பட்டு 2,39,701 பணிகள் ரூ.7,724.57 கோடி செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளது. இது மொத்த செலவினத்தில் 57% ஆகும்.

### 4.1.7 நீர் பாதுகாப்பு பணிகள்.

### அ. நீர் வள மேலாண்மைக்கான 100 நாள் சிறப்பு முயற்சிகள் (2021)

அதிக அளவில் நீர் சேமிப்பு பணிகளை மேற்கொள்ளும் விதமாக செப்டம்பர் – நவம்பர் 2021–ல் 100 நாள் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒன்றிய அரசின் 'ஜல் சக்தி அபியான்–மழை நீர் சேகரிப்பின் ஒரு பகுதியாக 4,057 தடுப்பணைகள், 16,784 பண்ணைக்குட்டைகள், 1,562 கசிவு நீர்குட்டைகள், 5,681 நீர் அகழிகள்,6283 அமிழ்ந்த நீர்குட்டைகள் போன்ற 34,367 பணிகள் சிறப்பு முயற்சியாக மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டது. இந்த முயற்சியானது நீர் சேமிப்பு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் உள்ளூர் மக்களின் மத்தியில் ஆர்வத்தை மீண்டும் உருவாக்கியுள்ளது.



### ஆ. நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022)

2022 ஆம் ஆண்டில், மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜீன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக 2 குறிகோள்களுடன் நீர்வளப்பணிகள் எடுக்கப்பட்டன.

இக்காலத்தில் ஊரக பகுதிகளில் விழும் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிக்கும் வண்ணம் தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் அகழிகள், மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 15,397 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பசுமை வளம் அதிகரிப்பதை உறுதி செய்ய இந்த 75 நாட்களில் மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு வட்டார நாற்றங்கால் பண்ணைகளிலும் 10,000 மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு சுமார் 30,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

### 4.1.8 நீர் பாதுகாப்பு பணிகள் (2023)

இந்த காலகட்டத்தில், கிராமப்புறங்களில் ஒவ்வொரு சொட்டு மழைநீரும் சேகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள், அகழிகள், பாரம்பரிய நீர்நிலைகளை புதுப்பித்தல் போன்ற 1,30,816 நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும், மார்ச் மாதம் 22 ஆம் தேதி அன்று உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் உள்ளூர் நீர்நிலைகளை பாதுகாக்கவும், நீர் விரயத்தை குறைக்கவும். அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும் உறுதிமொழி எடுக்கப்பட்டது.



### 4.1.9 கண்காணிப்பு முறை

**அ. தேசிய கைப்பேசி கண்காணிப்பு முறை**

தேசிய கைப்பேசி கண்காணிப்பு செயலி 21 மே 2021 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது. மேலும், இச்செயலி மூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன் மூலம் ஓர் வெளிப்படை தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை இச்செயலி மூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் எடுக்கப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்யும் பணியில் களநிலை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அனைத்து பணித்தள பொறுப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார/ மாவட்ட அளவிலான அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**ஆ. பகுதி அலுவலர் ஆய்வு செயலி**

பகுதி அலுவலர் ஆய்வு செயலி 21.05.2021 அன்று ஊரக வளர்ச்சித்திட்டங்களை திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம் மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம் முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கிறது. மேலும் கள ஆய்வு விவரங்களை தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும் இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in இணையதளத்தின் மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இ. ட்ரோன் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிகளை கண்காணிக்க



ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஒன்றிய அரசு கோரியுள்ளது. அதன்படி, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ட்ரோன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டப் பணிகளை கண்காணித்தல் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்போது, அனைத்து 37 கிராமப்புற மாவட்டங்களிலும் ட்ரோன் தொழில்நுட்ப கண்காணிப்பை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**4.1.10. வெளிப்படைத் தன்மை**

**சமூக தணிக்கை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில்,

மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது(SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது.

மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒவ்வொரு கிராம வள பயிற்றுநர்கள்



பயிற்சி அளித்து சமூக தணிக்கை நடைபெற உதவுவார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வரிசைமுறை அல்லாமல் கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூகதணிக்கை மேற்கொள்வார்கள்.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்து. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராமசபை அமைகிறது. சமூக

தணிக்கையின் பலனாக கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலும் பதிவேடுகள் பராமரிப்பது மேம்பட்டு வருகிறது.

**2023-24ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்**

2023-24 நிதியாண்டின் சமூக தணிக்கை, 2022-23 ஆம் ஆண்டுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செலவினத்திற்காக 10,282 கிராம ஊராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 2242 கிராம ஊராட்சிகளுக்கு ஜூன் 2024க்குள் முடிக்கப்படும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் 15-வது நிதிக்குழு போன்ற பிற திட்டங்களுக்கும் சமூக தணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**4.1.11 குறைதீர் அலுவலர்**

மாவட்ட அளவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான குறைகள் மற்றும்



புகார்களை நிவர்த்தி செய்ய குறைதீர் அலுவலர்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 37 மாவட்டங்களுக்கும் குறைதீர் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி புரிந்து வருகின்றனர். தற்போது குறைதீர் அலுவலர்கள் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்திற்கும் (ஊரகம்) விரிவுபடுத்தப்பட்டுள்ளனர்.

**4.1.12 ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் இழப்பீட்டுத் தொகையும், வேலை கோரிய 15 நாட்களுக்குள் வேலை வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வழிவகை செய்கிறது. தமிழ்நாடு அரசு வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் குறித்த அறிவிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

**4.1.13 தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு**

**அ. 2023 – 24**: அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் வரவுசெலவுத் திட்டமான 41 கோடி மனித சக்தி நாட்களில் 40.87 கோடி மனித சக்தி நாட்கள் மொத்த செலவீனமான ரூ. 13,397 கோடியில் எய்தப்பட்டுள்ளது.

**ஆ. 2024 – 25:**

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழிருந்து மேற்செல் அணுகுமுறையில் தயாரிக்கப்படுகிறது. இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான தேவைகளை கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய அரசு 2024–25 ஆம் ஆண்டிற்கு தொழிலாளர் வரவு செலவு திட்டத்திற்கு 20 கோடி மனித சக்தி நாட்களை அங்கீகரித்துள்ளது. 20 கோடி மனித சக்தி நாட்கள் எட்டிய பிறகு, தொழிலாளர் வரவு செலவு மதிப்பீட்டினை உயர்த்துவதற்கான கருத்துரு ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.



**4.1.14 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிணைப்பு**

மாநில அரசின் ஓர் முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை துவக்கியுள்ளது. இது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II செயல்படுத்தப்பட்டு வரும் அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன் மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படும். இரண்டு திட்டங்களும் 2021–22ல் 2,657 கிராம ஊராட்சிகளிலும், 2022–23ல் 2,544 கிராம ஊராட்சிகளிலும் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II–ன்கூறுகளான நீர் நிலைகளை புணரமைத்தல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட நோக்கம்

மற்றும் அதன் பலன்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

இதே போல் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் திட்ட கூறுகளுடன் குறிப்பாக நீர்வள பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமெண்ட் கான்கிரீட்/ கம்பி வலை), பண்ணைக்குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள், மீள் நிரப்புத்தண்டு போன்ற பிற பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல்வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல், இத்துறை மூலம் அர்ப்பணிக்கப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால்கள் (1,500) மற்றும் முருங்கை நாற்றங்கால்கள் (3,500) போன்றவை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ளன.



கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II புவியியல் ரீதியாகவும் திட்ட செயலாக்க ரீதியாகவும் இயற்கை வள மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் உழவர்களுக்கு பலனை வழங்கிட ஒருங்கிணைந்து செயல்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் சிறப்பு உந்துதல் தரப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் வாழ்க்கைத்தர குறியீடுகளை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

**4.1.15. தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு**

2022-23 ஆம் ஆண்டில், 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3500 பிரத்யேக முருங்கை நாற்றங்கால்கள், 1500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்பட்ட கிராம அளவிலான கூட்டமைப்பு மற்றும் தொகுப்பு அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் கிராமங்களை பசுமையாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டிலும், மேற்கண்ட நாற்றங்கால்கள் 10 லட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்தால் மக்கள் பங்கேற்பு முறையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலிலுள்ளவர்களுக்கு தனி நபர் சொத்துக்கள்



வழங்கப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டில் மக்கள் பங்கேற்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலிலுள்ள (PIP) குடும்பங்களுக்கு பண்ணை குட்டைகள், திறந்த வெளிக்கிணறுகள், மரம் நடுதல் போன்ற 37,785 தனிநபர் சொத்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**4.1.16 மனித சக்தி நாட்களை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்**

**அ. தொகுப்புகளை அதிகரித்தல்**

தொழிலாளர்களின் வசிப்பிடத்திலிருந்து 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அதிகளவு மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக தொகுப்புகள் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலை வாய்ப்பை வழங்குவதற்காக, ஒவ்வொரு கிராம ஊராட்சியின் தேவைக்கேற்ப கூடுதல் தொகுப்புகளை உருவாக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 27,261

தொகுப்புகள் இருந்த நிலையில், தற்போது 808 தொகுப்புகள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, இன்று வரை 28,069 தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆ. பணி இணையாளர்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித்தளத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை மேற்பார்வையிடுவதற்காக ஒவ்வொரு பணித்தளத்திற்கும் ஒரு பணி இணையாளர் அதிகபட்சம் 100 நாட்களுக்கு ஈடுபடுத்தப்படுகிறார். வருகையை பதிவு செய்ய மற்றும் எளிய வழிகாட்டுதல்களை வழங்க தொழிலாளர்களில் இருந்து ஒருவர் தேர்வு செய்யப்படுவார் அவர் அவ்வேலை முடிவுறும் வரையிலோ அல்லது 100 நாட்கள் வரையிலோ இதில் எதில் முந்தையதோ அப்போது கட்டாயமாக பணியில் இருந்து மாற்றப்படுவார்.



**இ. வேலை உறுதி திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்களை ஈடுபடுத்துதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக முன்னர் மக்கள் நலப் பணியாளர்களாக பணிபுரிந்தவர்கள் மற்றும் அவர்களில் இறந்தவர்களின் வாரிசு தாரர்கள் அவர்களது விருப்பத்தின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிர்வாக நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.5,000 மற்றும் ஊராட்சி நிதியிலிருந்து ரூ.2,500-ம் ஆக மொத்தம் ரூ.7,500 மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**4.2 "அனைவருக்கும் வீடு" - பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்பு திட்டம்**

ஊரக வீட்டு வசதி திட்டத்தில் உள்ள இடைவெளிகளை களையும் விதமாக பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டம் 2016-17-ஆம் ஆண்டு

முதல் ஒன்றிய அரசால் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதிப்பகிர்வு 60:40 ஆகும். தமிழ்நாட்டில் இந்த விகிதம் 32:68 ஆக உள்ளது. அதாவது அனைவருக்கும் வீடு – பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 62% நிதியை தமிழ் நாடு அரசு வழங்குகிறது.

**4.2.1 நோக்கம்**

"அனைவருக்கும் வீடு" என்ற இலக்கை அடைய அனைத்து ஏழை, வீடற்ற குடும்பங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள குடிசைகள் மற்றும் சிதிலமடைந்த வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடுகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.



**4.2.2 வீட்டு வசதித் திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு**

தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகையுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைப்பதால் தமிழ்நாட்டில் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை ரூ.2.83 இலட்சமாக உள்ளது.

**அட்டவணை**
**தமிழ் நாட்டில் ஒரு வீட்டின் அலகு தொகை**

(தொகை ரூபாயில்)

| விவரம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| அலகு தொகை | 72,000 | 48,000 | 1,20,000 |
| மாநில அரசின் மேற்கூரை வேய்வதற்கான கூடுதல் நிதி | - | 1,20,000 | 1,20,000 |
| தனிநபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கு நிதி | 7,200 | 4,800 | 12,000 |

| விவரம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ்** 100 **மனித சக்தி நாட்களுக்கான ஊதியம்** (வீடு கட்டுவதற்கு 90 மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு 10 நாட்கள்) | 31,900 | - | 31,900 |
| **மொத்தம்** | 1,11,100 | 1,72,800 | 2,83,900 |

### 4.2.3 முக்கிய அம்சங்கள்

1. சுகாதாரமான சமைக்கும் இடத்துடன் கூடிய ஒரு வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும்.
2. பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60 விழுக்காடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 40 விழுக்காடு இதர இனத்தவருக்கு ஒதுக்கப்படுகிறது. (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு



வழங்கப்படும் 15 விழுக்காடு இதில் அடங்கும்) அனைத்து பிரிவுகளிலும் 5 விழுக்காடு ஒதுக்கீடு மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.
3. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு (2011) புள்ளி விவரங்களிலிருந்து 2019–20 ஆம் ஆண்டு வரை பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்ட வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல். நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலில் உள்ள பயனாளிகள் கிராம சபை மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.
4. ஆவாஸ் பிளஸ் புள்ளிவிவரங்களிலிருந்து 2021–22 ஆம் ஆண்டிற்கான வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.
5. தவணைத்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.

**அட்டவணை**

**திட்டத்தின் கீழ் முடிவுற்ற வீடுகளின் விவரம்**

| அனுமதி ஆணை வழங்கப்பட்டவை | முடிவுற்றவை | | | நிலுவை | முடிவுற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | 31.03.23 வரை | 01.04.23 முதல் 14.05.24 வரை | மொத்தம் | | |
| 744406 | 503113 | 100062 | 603175 | 141231 | 81.03 |

கடந்த 2016–17–ஆம் ஆண்டு முதல் 2020–21–ஆம் ஆண்டு வரை மொத்தமாக 2,82,630 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2021–22 முதல் நாளதுவரை 3,20,545 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வீடுகள் முன்னேற்றத்தில் உள்ளன, மேலும் இத்திட்டத்தின் காலம் கடந்த மார்ச் 2024–ல் முடிவடைந்துள்ள நிலையில், நிலுவையில் உள்ள அனைத்து வீடுகளும் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

**4.2.4 பெறப்பட்ட நிதியின் விவரம்**

இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்கு தொகை ரூ.5216.09 கோடியும், அதற்கு இணையான



மாநில அரசின் பங்கு தொகை ரூ.3477.39 கோடியும், ஆக மொத்தம் ரூ.8693.48 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட நிதியில் நாளதுவரை ரூ.7778.76 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

**4.2.5 கான்கிரீட் மேற்கூரை நிதி மற்றும் மாநில கூடுதல் நிதி**

தமிழ் நாடு அரசால், ஒரு வீட்டிற்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக ரூ.50,000/– மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கூலித்தொகை அதிகரிப்பால் ஏற்பட்ட நிதிச் சுமையை குறைக்க கூடுதல் நிதியாக ஒரு வீட்டிற்கு ரூ. 70,000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பில் ரூ.4502.23 கோடி மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை ரூ.4314.75 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

### 4.2.6 வீடு கட்டுவதில் மாற்றுத் தொழில்நுட்பங்கள்

குறைந்த செலவில் கட்டுமானப் பணியினை விரைந்து முடித்திட ஏதுவாக எக்ஸ்பண்டேட் பாலிஸ்டிரீன் பேனல்கள், இன்டர்லாக் ப்ரிக்ஸ், ஆட்டோகிளேவ்ட் ஏரேடட் கான்கிரீட் ப்ளாக்/பேனல்கள், ப்ளை ஆஷ் ப்ரிக்ஸ், ரேட் ட்ரேப் பாண்ட் உடன் கூடிய பில்லர் ஸ்லாப் போன்ற பல்வேறு புதிய/ மாற்று தொழில்நுட்பங்களை இத்துறை பின்பற்றி வருகிறது.

### 4.3 பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM–JANMAN)

இந்திய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகம், பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது, குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள பழங்குடி குழுக்களின் (PVTGs) சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, பாதுகாப்பான வீட்டுவசதி, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம், கல்வி, மற்றும் ஊட்டச்சத்துக்கான மேம்பட்ட



வழிமுறைகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்காகவும், சாலை மற்றும் தொலைத்தொடர்பு இணைப்புகள் மற்றும் நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கிடும் பொருட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள வழிமுறைகளில், குறிப்பிட்ட சில மாற்றங்களுடன் இத்திட்டத்தினை இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் 21 மாவட்டங்களில் வாழும் ஆறு பழங்குடியின பிரிவினர்களான இருளர் காட்டுனாயக்கம், கோத்தா, குரும்பா, பனியன் மற்றும் தோடா ஆகிய பழங்குடியினர் இத்திட்டத்தின் வாயிலாக வீட்டு வசதியினை பெறலாம்.

### 4.3.1 திட்ட செயலாக்க காலம்

இந்த திட்டம் டிசம்பர் 2023 இல் தொடங்கப்பட்டது, மேலும் மூன்று ஆண்டு காலத்திற்கு, அதாவது 2025–26 வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**4.3.2. நீக்கல் காரணிகள்**

சொந்தமாக கான்கிரிட் வீடு உள்ள குடும்பங்கள், ஏதேனும் ஒரு உறுப்பினர் அரசு ஊழியராக உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவையாகும்.

**4.3.3 ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகை**

ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையான ரூ.2.00 இலட்சம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. 2023-24 ஆம் ஆண்டிற்கான இத்திட்ட இலக்கு 4811 வீடுகள் ஆகும்.

**4.3.4 தமிழ்நாட்டில் அலகு தொகை மற்றும் வீடு கட்டப்படும் அளவு**

ஒன்றிய அரசால், பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட அலகுத் தொகையுடன், 300 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள் கட்டுவதற்கான அலகுத் தொகையை



சமவெளிப் பகுதிகளுக்கு ரூ.5.07 இலட்சமாகவும், மலைப்பகுதிகளுக்கு ரூ.5.73 இலட்சமாகவும் தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளது.

**4.3.5. 2023-24 ஆம் ஆண்டிற்கான இலக்கு**

ஒன்றிய பழங்குடியினர் நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட பண்டைய பழங்குடியினர் வாழும் கிராமங்களின் பட்டியல் அடிப்படையில், ஆவாஸ் செயலி மூலம் கிராம அளவிலான கணக்கெடுப்பு மேற்கொண்டு தகுதியான குடும்பங்கள் கண்டறியப்பட்டு, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். 21 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 4811 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 3844 வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட அனைத்து வீடுகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 4.4 ஜல் ஜீவன் இயக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கிடும் வகையில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் நோக்கத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் 2019–20 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல் மூலம் வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

### 4.4.1 திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு

ஜல் ஜீவன் இயக்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள குடிநீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த தேவைப்படும் திட்ட மூலதன தொகையில் 50 சதவீதம் ஆதிதிராவிடர்



/ பழங்குடியின மக்களை கொண்ட கிராமங்களில் 5 சதவீதமும், இதர கிராமங்களில் 10 சதவீதமும் பணமாகவோ / பொருளாகவோ / உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

### 4.4.2 ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

i) கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்பட வைத்தல்.

iii) ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்காக தேவைப்படும் இடங்களில் நிலத்தடிநீர் போதுமான அளவு இல்லாதிருப்பின் கூட்டு

குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலம் தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.

iv) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் முடிவுற்றுள்ள ஒற்றை கிராம திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல்.

**4.4.3 நிதி பகிர்மான முறை**

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) பங்களிப்பாக வழங்கும்.

**4.4.4 செயல்படுத்தும் முறை:**

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஒற்றை கிராம திட்டத்தில் குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்குள் இருந்தால், திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல். இதுபோன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டத்தில் **கிராம உட்கட்டமைப்பு பணிகளை** வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டமிட்டு செயல்படுத்தும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல் கிராமங்களுக்கான திட்டத்தினை ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்கு வெளியே இருந்தால், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி வரை மொத்தமாக நீரினை வழங்கிட செயல்படுத்துகிறது.

**4.4.5 இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு மற்றும் தரம் மதிப்பீடு செய்தல்.

- ஊரக பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் நீண்ட கால அடிப்படையில் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றை கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் குடிநீர் விநியோக வழிமுறைகள், பணிகளை நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவை பதிவு செய்யப்படும்.
- கள ஆய்வு உபகரணங்களின் மூலம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை கொண்டு நீரின் தரத்தினை உறுதிசெய்தல்.

**4.4.6 இயக்குதல் மற்றும் பராமரித்தல்**

குடிநீர் விநியோகப் பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும்.



i. பயனீட்டாளர்களுக்கான குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.30/– வசூலிக்கப்படுகிறது .

ii. மொத்த நீர் பரிமாற்ற கட்டணம் அரசால் நிர்ணயிக்கப்பட்டவாறு சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.

iii. ஊராட்சி மற்றும் கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு (VWSC) கிராமத்தில் நடைபெறும் குடிநீர் பணிகளை கண்காணிக்கிறது.

**4.4.7 15வது ஒன்றிய நிதிக் குழு மானியம் மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்**

கிராம ஊராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் மூலம் அதாவது, 15வது ஒன்றிய நிதிக் குழு மானியம் (வரையறுக்கப்பட்ட நிதி 30%), மாநில நிதிக் குழு மானியம், மாவட்ட கனிமவள நிதி மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் மொத்தமுள்ள 1,25,23,588 வீடுகளில் நாளது வரை 1,03,31,470 (82.50%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் நாளது வரை வழங்கப்பட்டுள்ளது மற்றும் 67,494 ஒற்றை கிராம திட்டப் பணிகளும் (ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் 15 வது நிதிக் குழு மானியம்) 101 பல் கிராம திட்டம் / கூட்டுக் குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.4.8 குடிநீர் விநியோகத்தினை கண்காணித்தல்

சிக்கனமான மின்சார பயன்பாடு மற்றும் சிறந்த முறையிலான குடிநீர் விநியோகம் ஆகியவை தானியங்கி சென்சார் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் மேம்படுத்தப்படுகிறது. நீர் ஆதாரத்தில் ஒரு ஃபோட்டானிக் அமைப்பும், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்ட அளவை கண்டறியும் தானியங்கி சென்சாரும் பொருத்தப்படும். இவை நீர் உந்தும் மோட்டாரில் ஆன்/ஆஃப் செய்யும் வகையில்



நிரலிடப்பப்பட்டுள்ளது (programmed). இது நீர் வீணாவதை கட்டுப்படுத்தும்.

பின்வரும் ஊராட்சிகளில் சோதனை அடிப்படை மற்றும் ஆய்வுக்காக சென்சார் அடிப்படையிலான தானியங்கி கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | மாம்பாக்கம் |
| 2. | காஞ்சிபுரம் | மருதூர் |
| | | மேல்கதிர்பூர் |
| 3. | திருவள்ளூர் | அழிஞ்சிவாக்கம் |
| | | மல்லியன்குப்பம் |
| 4. | ஈரோடு | கதிரம்பட்டி |
| 5. | கோயம்புத்தூர் | அரசூர் |

நீர் விநியோகத்திற்கான இந்த தானியங்கி கண்காணிப்பு அமைப்பு படிப்படியாக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

### 4.4.9 குடிநீர் தரத்தினை கண்காணித்தல்

கிராம ஊராட்சிகளில் விநியோகிக்கப்படும் குடிநீர் தரத்தினை பரிசோதனை செய்வதற்கான களஆய்வு உபகரணங்களின் மூலம் பயிற்சி பெற்ற 62,625 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை கொண்டு நீரின் தரம் பரிசோதிக்கப்படுகிறது. இப்பரிசோதனையில் கார-அமிலத் தன்மை, மொத்த கலங்கியுள்ள திடப்பொருள்கள், கலங்கல்தன்மை, குளோரைடு, மொத்த காரத்தன்மை, மொத்த கடினத்தன்மை, சல்ஃபேட், இரும்பு, மொத்த ஆர்செனிக், ஃப்ளோரைடு, நைட்ரேட், மொத்த கொலிபோம் பாக்டிரியா, இ.கோலி பாக்டிரியா ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு, குடிநீர் விநியோகத்தின் செயல்பாட்டில், முன்மாதிரியான செயல் திறனுக்காக 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியன்று புது தில்லியில் நடைபெற்ற ஸ்வச் பாரத் திவாஸ் விழாவின்



போது மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

### 4.5 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1993 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் மக்களுக்கான தேவைகளின் அடிப்படையில் நீடித்த சமூகச் சொத்துக்களை உருவாக்க வளர்ச்சித் தன்மை கொண்ட பணிகளைப் பரிந்துரைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ.5 கோடி வீதம் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டச் செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும்

பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2023-24 ஆம் ஆண்டு ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு தலா ரூ.5 கோடி வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

17-வது மக்களவை காலத்தில் (2019-20 முதல் 2023-24 வரை) இத்திட்டத்தினை செயல்படுத்திட ஒன்றிய அரசின் புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் ரூ.663 கோடி நிதி மக்களவை உறுப்பினருக்கும் ரூ.316 கோடி நிதி மாநிலங்களவை உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டு அதன்படி, 10,684 பணிகள் ரூ.806.95 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டன.



## 4.6 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி அந்த கிராமங்களை மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும், மலைப்பகுதி / பழங்குடி கிராமங்கள் மற்றும் சவாலான பகுதிகள் எனில் மக்கள் தொகை 1,000 முதல் 3,000 வரை உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராம ஊராட்சியே இதன் அடிப்படை அலகாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது அல்லது தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் படி 2024 ஆம் ஆண்டிற்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்தப்படும் .

நாடாளுமன்ற மாதிரி கிராமத்திட்டத்தின் கீழ் கண்டறிந்த கிராம ஊராட்சிகளின் முழுமையான வளர்ச்சிக்கு நடைமுறையில் உள்ள ஒன்றிய மற்றும்



மாநில அரசு திட்டங்கள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

### 4.7 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

### 4.7.1 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I

இணைப்புச் சாலை வசதி இல்லாத **500–**க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I–ன் நோக்கமாகும். ஏற்கனவே உள்ள இணைப்புச் சாலைகளை **மேம்படுத்துதல்,** பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I–ன்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. **தமிழ்நாட்டில், 500–**க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத **1,986** குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I–ன் மூலம் இணைப்புச் சாலை வசதி **வழங்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டிற்கு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்– I–ன்கீழ் 11 கட்டங்களில் 2000–01 முதல் 2018–19 வரை 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரகச் சாலைகள் மற்றும் 98 பாலங்கள் ரூ.4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.7.2 **பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் II**

ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–II, ஒன்றிய அரசால் 2013–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I மற்றும் பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–II–ன்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



### 4.7.3 **பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III**

குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–III, 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–III–ன் கீழ், தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2019–20 ஆம் ஆண்டு முதல் 2022–23 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிற்கு 4,449 கி.மீ நீளமுள்ள 1,154 சாலைகள் மற்றும் 55 பாலங்கள் ரூ.2,883 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2023–24 ஆம் ஆண்டிற்கு, 2,869 கி.மீ நீளமுள்ள 660 சாலைகள் மற்றும் 28 பாலங்கள்

ரூ.1,945 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

4.7.4 **நிதி**

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் தொடக்கத்தில் ஒன்றிய அரசின் 100% நிதியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–ஆம் ஆண்டு முதல் 60% ஒன்றிய அரசு 40% மாநில அரசு என நிதி பகிர்வினை ஒன்றிய அரசு மாற்றியமைத்துள்ளது.

4.7.5 **பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பராமரிப்பு**

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகளின் 5 ஆண்டு தொடர் பராமரிப்பு இமார்க் (**e-MARG**) எனப்படும் இணைய முகப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு, 2022–23 ஆம் ஆண்டில் ரூ. 52.68 கோடியும் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் ரூ.54.37 கோடி நிதியும் மாநில அரசின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 5



ஆண்டு தொடர் பராமரிப்பு முடிவுற்ற சாலைகளின் காலமுறை பராமரிப்பு மாநில அரசு திட்டத்தின் கீழ் எடுக்கப்படுகிறது.

2023–24 ஆம் ஆண்டிற்கு, ஊக்க நிதி ரூ.80.45 கோடி பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் சாலைகளின் காலமுறை பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படும்.

**4.7.6 பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா – பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PMGSY– PM JANMAN)**

100க்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு சாலை வசதி ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் PM–JANMAN திட்டத்தின் கீழ் 2023–24ஆம் ஆண்டிற்கு, 11 பழங்குடியின குடியிருப்புகளுக்கு 18.085 கி.மீ நீளமுள்ள 8 சாலை பணிகள் ரூ. 1542.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த பிரேரணை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.7.7 **தரக்கட்டுப்பாடு**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்புபொறியாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs) பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாட்டு பயிற்சிகள் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

தற்போது சாலைப் பணிகள் மற்றும் திட்டப் பணிகளின் தரத்தினை கண்காணிக்க 33 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (சாலைகள்) மற்றும் 26 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (திட்டங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர்.



பல்வகை கட்டிடங்கள் மற்றும் பாலங்களின் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பினை கூர்ந்தாய்வு செய்திடவும், சாலைகள். பாலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளவும் தரக்கட்டுப்பாட்டினை கண்காணிக்கவும் 50 தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

4.7.8 **தரக்கட்டுப்பாட்டுஆய்வகங்கள்**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலை நகரில் மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும், தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ள மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் துறையின் மூலம் நிறுவப்பட்டுள்ளன. மேலும், பணித்தளத்தில் பணி நடைபெறும் பொழுதே தரக்கட்டுபாட்டு ஆய்வுகள் மேற்கொள்ள 7 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளது. தள ஆய்வின் போது பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய துறை அலுவலர்களின் வாகனங்களிலும்

அடிப்படை தரக்கட்டுப்பாட்டு கருவிகள் உள்ளன. அனைத்துப் பணிகளுக்கும் தரக்கட்டுப்பாட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. தர ஆய்வாளர்கள் / சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் / உதவி செயற்பொறியாளர்களின் திருப்திகரமான தரக்கட்டுப்பாட்டு ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மட்டுமே பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது.

### 4.8 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை 2019 ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. கிராம சுகாதார இயக்கமானது இரு கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள்



மற்றும் பொது சுகாதார கழிப்பறைகள் கட்டுவதை பிரதான நோக்கமாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. தூய்மை பாரத இயக்கம் இரண்டாம் கட்டமாக, 2020-21 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை, தூய்மை பாரத இயக்கம், முதல் கட்ட செயல்பாடுகள் மூலமாகப் பெற்ற ஆதாயங்களை தக்கவைத்து மேலும் மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. தமிழ்நாடு 2019 ஆம் ஆண்டு திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைந்துள்ளது. ஊரகப் பகுதிகளில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்கவைத்தல் மற்றும் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை செயல்பாடுகள் மூலமாக கிராமங்களில் தூய்மை நிலையை மேம்படுத்துவதோடு, தக்க வைத்து திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கூடுதல் கிராமங்களாக்குவதும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II-ன் முக்கிய நோக்கமாகும்.

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதுடன் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையுடனும் காட்சிக்கு தூய்மையான கிராமங்களே மாதிரி கிராமங்கள் ஆகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் மலக்கசடு மேலாண்மை நீங்கலாக இத்திட்டத்தின் இதர கூறுகள் அனைத்தும் 15–வது நிதிக்குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

**4.8.1 கிராம சுகாதார செறிவிற்கான திட்டமிடல்:**

தனிநபர் இல்லங்கள் மற்றும் நிறுவனங்களில் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதிலும் மற்றும் அதனை பயன்படுத்தப்பட்டு வருவதிலும் சமீப காலங்களில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஒரு கிராமம் முழுமையான தூய்மைக்கான இடைவெளிகளை



கண்டறிதல், மேலும், அவற்றை இணைத்து கிராம நிலையினை உயர்த்ததுவதன் மூலம் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கூடுதல் நிலையை (ODF–plus) அடைவதில் "ஆர்வமுள்ள ஊராட்சி" என்ற நிலையிலிருந்து "மாதிரி ஊராட்சியாக" மாறுவதற்காக விரிவான மற்றும் முழுமையான மதிப்பீடு செய்வதன் மூலம் தற்போதைய சுகாதார வசதிகள், குடும்ப மற்றும் சமூக அளவில் தேவைப்படும் சுகாதார வசதிகள் ஆகியவை ஒவ்வொரு கிராம ஊராட்சி வாரியாக கணக்கிடப்படுகிறது.

திட மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை தேவைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்து, தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையை மதிப்பீடு செய்வதற்கும், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மக்கள், தெரு வாரியாக நடைபயணங்களை மேற்கொண்டதன் மூலம் ஊராட்சிகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பங்கேற்பு தன்மைக்கு சான்றாக 'கிராம சுகாதார செறிவு

திட்டத்தை' (VSSP) தயாரிக்கும் பணியை மேற்கொண்டது. கிராம சுகாதார செறிவு திட்டம் இறுதி செய்யப்பட்டவுடன், அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) நிதியிலிருந்தும், பிற திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15–வது ஒன்றிய நிதிக்குழு மானியத்திலிருந்தும் நிதி ஒதுக்கப்படுகிறது. தூய்மை மற்றும் பசுமையான மாநிலத்தை உருவாக்க, திடக்கழிவு மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை ஆகியவற்றை எய்துவதின் மூலம் நிலையான சாதனையை செயல்படுத்துவதற்கு கீழ்மட்ட அணுகுமுறை மற்றும் தேவைகள் அடிப்படையிலான திட்டமிடலை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**4.8.2 தனிநபர் இல்லக் கழிப்பறைகள்**

அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக்



கழிப்பறையானது அடித்தளம், மேற்கட்டமைப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மூலம் முறையான சுகாதாரம் உறுதி செய்யப்படுகிறது. கண்டறியப்பட்ட, தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானத்திற்காக ரூ.12,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதுவரை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) இரண்டாம் கட்டத்தில், 3,00,971 தனிநபர் இல்லக்கழிப்பறைகள் ரூ.335.57 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

**4.8.3 சமுதாய சுகாதார வளாகங்கள் (CSC)**

திறந்தவெளி மலம் கழித்தலற்ற கிராமம் என அறிவிக்கப்பட்ட கூடுதல் நிலை கிராமத்தில், அக்கிராம மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைந்தபட்சம் ஒரு சமுதாய சுகாதார வளாகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாய சுகாதார வளாகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே கழிப்பறை தேவையான

எண்ணிக்கையிலான வசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு கழிப்பறை இருக்கைகள், குளியல் அறைகள், நீரோட்டம் மற்றும் கை அலம்பும் தொட்டி ஆகியவை இருக்கும். கிராமத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அது அமைக்கப்பட வேண்டும். 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில், 1,304 சமுதாய சுகாதார வளாகங்கள் ரூ.70.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில், மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகள் மற்றும் நூலகங்கள், பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு அருகில் உள்ள பொது இடங்களில் 4,500 சிறிய சமுதாய சுகாதார வளாகங்கள் எடுக்கப்பட்டு மற்றும் 1,295 சிறிய சமுதாய சுகாதார வளாகங்கள் ரூ.27.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.



### 4.8.4 திடக்கழிவு மேலாண்மை

தூய்மை பாரத இயக்கத்தில் (ஊரகம்) திடக்கழிவு மேலாண்மை முக்கிய கூறாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம்-II ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான நிதி உதவி, மக்கள் தொகை அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது. மேலும், 15-வது நிதிக்குழு மானியங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள 66,130 தூய்மை காவலர்கள் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கின்றனர். 150 வீடுகளுக்கு ஒரு தூய்மை காவலர் பொறுப்பாக்கப்பட்டுள்ளார். அனைத்து ஊராட்சிகளிலும் 'கழிவு தணிக்கை' நடத்தப்பட்டு, அந்தந்த

ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவு வகைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மொத்தத்தில், 70% க்கும் அதிகமான கழிவுகள் மக்கும் கழிவுகள் ஆகும்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு குப்பைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து அளிப்பதின் மூலம் ஈரக் கழிவுகளை எளிதில் உரமாக மாற்றவும், உலர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும் முடியும். புறநகர் / பெரிய கிராம ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவுகளை திறம்பட நிர்வகிக்க, இருநூற்று எண்பத்தேழு நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**(அ) நெகிழிக் கழிவு மேலாண்மை**

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ், வட்டார அளவில் நெகிழிக்கழிவு மேலாண்மை அலகுகளை நிறுவ ரூ.16.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும்



நெகிழிக்கழிவுகளை பயன்படுத்தி தார் சாலைகள் அமைக்கப்படுகின்றன. வீடுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக்கைப் பிரித்து வைப்பதை ஊக்குவிக்க, நேரடி நெகிழி மீள வாங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.23.30 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 310 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டன.

**(ஆ) தூய்மை தமிழ்நாடு நிறுவனம்**

குப்பைகளை, குறிப்பாக மக்காத குப்பைகளை, மறுசுழற்சி செய்வது அதற்கான மதிப்புசங்கிலிகளை உருவாக்குவதில் உள்ள இடைவெளிகளை இந்த அரசாங்கம் கண்டறிந்துள்ளது. இதற்காக நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மீள குப்பைகளை பிரித்தல், அதற்கான தளவாடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் விலை நிர்ணயித்தல் ஆகிய பிரத்யேக நடவடிக்கைகளை மேற்கொள்ள நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த அரசு அறிவித்துள்ளது.

இந்நிறுவனம், ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பிரிக்கப்பட்ட மக்காத குப்பைகளை சேகரித்து, அவற்றை மீள பிரித்து, அதனை அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களுக்கு விற்றோ அல்லது அவற்றை சிமெண்ட் தொழிற்சாலைகள் மூலமாக குப்பைகளை எரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும். மறுசுழற்சி கடினமாக உள்ள பல அடுக்கு நெகிழிகளை மேற்கண்டவாறு சிமெண்ட் தொழிற்சாலைகளில் எரிக்கப்படும். இந்நிறுவனம் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்படும் குப்பைகளுக்கு டன் அடிப்படையில் தரகுத் தொகை வசூலிக்கும். மறுசுழற்சி செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் மற்றும் மறுசுழற்சி செய்யமுடியாத குப்பைகளை எரிப்பதற்கு ஏற்படும் செலவுகள் ஆகியவற்றை கணக்கிட்டு தரகுத்தொகை பிடித்தம் செய்த பிறகு தரகுத் தொகை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும்.



மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் எரிக்கக்கூடிய குப்பைகளின் விலை, அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் தொழிற்சாலைகளுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையானது ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இந்நிறுவனத்துடன் இணைத்துள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு ஆதார விலையாக செயல்படும். உள்ளாட்சி அமைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடம் மறுசுழற்சி செய்யப்படும் குப்பைகளை அதிக விலைக்கு கோரும்பட்சத்தில் அதாவது நிறுவனம் வழங்கும் ஆதார விலைக்கு கூடுதலாக இருப்பின் விற்கலாம். தூய்மை தமிழ்நாடு நிறுவனம் அதிகபட்ச விலையை வழங்கும்பட்சத்தில் மற்ற நிறுவனங்களுக்கு ஆதார விலைக்குக் கீழே விற்க அனுமதிக்கப்படமாட்டார்கள். குப்பைகளின் போக்குவரத்து, இருப்பு வைத்தல், மறுபடியும் பிரித்தல், தரம் பிரித்தல், அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சியாளர்கள் அல்லது தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்தல்

ஆகிய மறுசுழற்சி சார்ந்த நடவடிக்கைகள் இந்நிறுவனத்தின் பொறுப்புகளாகும்.

வட்டார மற்றும் மாவட்ட அளவிலான வள மீட்பு மையங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற கட்டமைப்புகள் உள்ளாட்சி நிதி அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் கீழ் அமைக்கப்படும். இந்நிறுவனம் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான வள மீட்பு மையங்களின் செயல்பாடுகளை கவனிப்பதோடு, பராமரிக்கவும் செய்யும். இம்மையத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான செலவினங்கள், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் போன்ற செயல்பாட்டு செலவுகளை இந்நிறுவனமே ஏற்கும். இந்த வசதிகளை இயக்குவதற்கான பணியாளர்களை சுய உதவி குழுக்களை கொண்டு பூர்த்தி செய்யும்.



### 4.8.5 திரவக் கழிவு மேலாண்மை

**(அ) சாம்பல் நீர் மேலாண்மை**

சாம்பல் நீர் மேலாண்மையின் கீழ், கிராம ஊராட்சிகளை தன்னிறைவு செய்யும் வகையில், கிராம சுகாதார தன்னிறைவு திட்டத்தின் கீழ் விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு வட்டாரத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம் மொத்தம் 776 முன்மாதிரி கிராம ஊராட்சிகளாக உருவாக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. சாலைகள்/ தெருக்கள் மற்றும் பொது இடங்களில் சாம்பல் நீர் தேங்குவதை தடுக்கவும், சாம்பல் நீரை திறம்பட கையாளுவதை உறுதி செய்யவும், சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் கிடைமட்ட/ செங்குத்து வடிகட்டிகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ் 15–வது நிதிக்குழு மானியத்துடன் ஒன்றிணைந்து கட்டப்படுகின்றன.

**(ஆ) மலக்கசடு மேலாண்மை**

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்கனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு (FSTP) வசதிகளில் கிராமப்புறங்களின் மலக்கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் நகர்ப்புற பகுதிகளுடன் தொகுப்பு விவரணை செய்யப்பட்டு வருகிறது. அதன்படி ஒன்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்து நான்கு கிராம ஊராட்சிகள் நான்கு கட்டங்களில் செலவுப் பகிர்வு அடிப்படையில் அருகாமையில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களுடன் தொகுப்பு விவரணை செய்யப்படும். தொகுப்பு விவரணை செய்வது சாத்தியமில்லாத இடங்களில், விடுபட்ட கிராம ஊராட்சிகளை தொகுப்பு விவரணை செய்து தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ், மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். ஒரு மலக்கசடு சுத்திகரிப்பு நிலையம் ஏற்கனவே



அனுமதிக்கப்பட்டுள்ளது, 2024–25–ல், மேலும், 15 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

**4.8.6 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 திருத்தங்கள் மற்றும் புதிய விதிகள்:**

மனித கழிவுகளை மனிதனே அகற்றுவதைத் தடுக்கவும், மேலும், சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்தவும், கிராமப்புறங்களில் மலக்கசடுகளை விஞ்ஞானபூர்வமாக மேலாண்மை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை மேலும் முனைப்பாக செயல்படுத்துவதற்கு சட்டங்கள் அவசியம். இதற்காக, தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்தம்) சட்டம், 2024 சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. சட்டத்திருத்தத்தின்படி மலக்கசடு மேலாண்மை விதிகள் விரைவில் அமுல்படுத்தி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன் தற்போதைய விதிகள், கிராமப்புறங்களில்

உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களால் உருவாக்கப்படும் திடக்கழிவுகளை ஒழுங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் ஊராட்சிகளுக்கு போதுமானதாக இல்லை. இதனை சரிசெய்ய, தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாவது திருத்தம்) சட்டம், 2024ன்படி புதிய விதிகள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. புதிய விதிகளை செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்கான புதிய விதிமுறைகள் அமுல்படுத்தி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

#### 4.8.7 சாண எரிவாயு கலன் திட்டம்

இத்திட்டம் வேளாண் கழிவுகளை மதிப்புமிக்க வளமாக மாற்றுவதன் மூலம் கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விலங்குகளின் கழிவுகள், சமையலறை மிச்சங்கள், விவசாய கழிவுகள் மற்றும் சந்தைக் கழிவுகளை சாண எரிவாயு மற்றும் உயிரிக்கழிவாக (Bio-slurry) மாற்றுகிறது. இந்தத் திட்டம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ் திட்டக் காலம் முழுதும் ஒரு



மாவட்டத்திற்கு ரூ.50.00 லட்சம் வரை ஒரு முறை வழங்கப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் 20 மாவட்டங்களில் 87 சாண எரிவாயு கலன்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிரமப்புறங்களில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் சாண எரிவாயு கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

#### 4.8.8 இதர திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்ட நிதியை, 15–வது மத்திய நிதிக்குழு மானியம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, உருவாக்கப்பட வேண்டும்.

- **கரிமவாயு திட்டம்:**

  மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தத் திட்டமானது, தனிப்பட்ட நபர்கள், விவசாயிகள், கோழிப்பண்ணைகள், கோசாலைகள், இறைச்சிக்கூடங்கள், பால் பண்ணைகள் / கூட்டுறவு நிறுவனங்கள் / தொழிற்சாலைகள்/ அமைப்புகளுக்கு ஒரு நாளைக்கு 1 கனமீட்டர் முதல் 2500 கனமீட்டர் உயர் எரிவாயு உற்பத்தி செய்யும் சிறிய மற்றும் நடுத்தர உயர் எரிவாயு கலன்களை அமைக்க நிதியளிக்கிறது. நிறுவனங்கள் மற்றும் பிற பயனாளிகளுக்கு கோரிக்கையின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

  2024-25, ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசால் 600 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II கிராமப்புற சுகாதாரம்:** மொத்த நிதியில்



10 சதவித நிதி, சுத்தமான மற்றும் பசுமையான கிராமம் எனும் இலக்கிற்கு ஒதுக்கப்படுகிறது. இதில் வடிகால் மற்றும் உறிஞ்சுக் குழிகள் அடங்கும்.

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS):** தனிநபர் மற்றும் சமுதாய உறிஞ்சிக்குழிகள், கிடைமட்ட மற்றும் செங்குத்து வடிகட்டிகள் மற்றும் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட சுகாதாரக்கட்டுமானப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- **15-வது ஒன்றிய நிதி ஆணைய நிதி**: ஒன்றிய அரசின், குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறை வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திடக் கழிவு மேலாண்மை மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளும், 15-வது நிதிக்குழு

மானியத்தில் 30% உடன் ஒன்றிணைந்து மட்டுமே எடுக்கப்படவேண்டும்.

**4.8.9 தகவல், கல்வி, மற்றும் தகவல் தொடர்பு**

சுய உதவி குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 12,000 ஊக்குவிப்பாளர்களுக்கு நேரடி தகவல் பரிமாற்றத்தின் மூலம் பொதுமக்களிடையே சிறந்த சுகாதார பழக்கங்களை ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

**4.8.10 நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்**

'நம்ம ஊரு சூப்பரு' முதல் பிரச்சாரம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆகஸ்ட் 15, 2022 அன்று தொடங்கப்பட்டு, அக்டோபர் 2, 2022 வரை நடத்தப்பட்டது. மக்களின் மனமாற்றத்தின் மூலம் தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்குவதற்காக சுகாதாரம் மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி மக்கள்



இயக்கத்தை உருவாக்குவதே முதன்மை நோக்கமாக இருந்தது.

முதல் பிரச்சார இயக்கத்தில் கிடைத்த அமோக வரவேற்பின் காரணமாக, தற்போது ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று தூய்மையான மற்றும் சுகாதாரமான கிராமங்களை உருவாக்குவதற்காக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.9 ஷியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்**

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சியுடையதாக சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் கிராமங்கள்" உருவாக்குவதை நோக்கமாக கொண்டு ஒன்றிய அரசால் ஷியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு 11 பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை 2016 – 17 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் படிப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக (2016–17) – ஐந்து

தொகுப்புகள் (திருநெல்வேலி – சுத்தமல்லி, கோயம்புத்தூர் – மதுக்கரை, சிவகங்கை – வாணியங்குடி, திருப்பூர் – வேலாயுதம்பாளையம் மற்றும் திருவள்ளூர் – குத்தம்பாக்கம்) இரண்டாம் கட்டமாக (2017–18) – மூன்று தொகுப்புகள் (செங்கல்பட்டு – சிங்கபெருமாள் கோவில், மதுரை – கோவில் பாப்பாக்குடி மற்றும் தஞ்சாவூர் – திருமலை சமுத்திரம்), மூன்றாம் கட்டமாக (2018–19) – மூன்று தொகுப்புகள் (கன்னியாகுமரி – சடையமங்கலம், தேனி – சீலையம்பட்டி மற்றும் கிருஷ்ணகிரி– அலசபள்ளி பட்டவரபள்ளி)] ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இடைநிரவல் நிரப்பு நிதியின் (CGF) கீழ் அங்கீகரிக்கப்பட்ட 976 பணிகளில் 885 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 91 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.311.32 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.276.62 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 176 சொத்துகள் பயனாளர் குழுக்கள் / சம்பந்தப்பட்ட துறைகளிடம்



ஒப்படைக்கப்பட்டு வாழ்வாதார நடவடிக்கைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட சொத்துகள் பயனாளர் குழுக்கள் மற்றும் தொடர்புடைய துறைகளிடம் ஒப்படைக்கப்படும்.

**4.10 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்:**

**பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம்**

கிராம மக்கள் தொகையில் 40 சதவிகிதத்திற்கும் மேல் ஆதிதிராவிடர் வாழும் கிராமங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்றிய அரசு 2022–23 ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 1113 கிராமங்களை தேர்ந்தெடுத்துள்ளது. இக்கிராமங்களில், விடுபட்ட மற்றும் தன்னிறைவு பெற தேவையான பணிகளுக்காக, ஒரு கிராமத்திற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

நலத்துறையினால் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படுகிறது. அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல், கழிப்பறைகள் கட்டுதல், இணைப்புச் சாலைகள், வடிகால் வசதி செய்தல் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் 1113 கிராமங்களில் மொத்தம் 3,163 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# 5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு

## 5.1. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி விதிகளின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளனர். கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களின் பணி விதிகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி விதிகளின் (1969) கீழும், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பணி விதிகள் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ன் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன.

## 5.2. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

**அட்டவணை 5.1**

**31.01.2024 தேதியின்படி வகை வாரியான பணியாளர்கள் விபரம்**

**அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | | பிற துறைகள் /அயற்பணியிடம் | மொத்தம் |
| | | மாநில அளவிலான பணியிடம் | மாவட்ட அளவிலான பணியிடம் | | |
| 1. | கூடுதல் இயக்குநர் | 14 | – | 8 | 22 |
| 2. | இணை இயக்குநர் | 8 | 80 | 11 | 99 |
| 3. | உதவி இயக்குநர் | 16 | 388 | 9 | 413 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 47 | 1068 | 2 | 1117 |
| | **மொத்தம்** | **85** | **1536** | **30** | **1561** |



## 5.3. பொறியியல் பணியமைப்பு

இத்துறையில், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பதவிகள் தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி பணி விதிகளின் கீழும், முதுநிலை வரைதொழில் அலுவலர், இளநிலைப் பொறியாளர், பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் சாலை ஆய்வாளர் பதவிகள் தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி பொறியியல் சார்நிலை பணி விதிகளின் கீழும் நிர்வகிக்கபடுகின்றன.

**அட்டவணை 5.2**

**வகை வாரியான பொறியியல் பணியாளர்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | | பிற துறைகள் /அயற்பணி யிடம் | மொத்தம் |
| | | மாநில அளவிலான பணியிடம் | மாவட்ட அளவிலான பணியிடம் | | |
| 1. | தலைமைப் பொறியாளர் | 2 | – | – | 2 |
| 2. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | – | – | 3 |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | | பிற துறைகள் /அயற்பணி யிடம் | மொத்தம் |
| 3. | செயற் பொறியாளர் | 2 | 39 | 13 | 54 |
| 4. | உதவி செயற் பொறியாளர் | 4 | 180 | 21 | 205 |
| 5. | உதவிப் பொறியாளர் | 13 | 917 | 15 | 945 |
| 6. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | – | 37 | – | 37 |
| 7. | இளநிலைப் பொறியாளர் | – | 315 | – | 315 |
| 8. | பணி மேற்பார்வையாளர் /இளநிலை வரை தொழில் அலுவலர் | 3 | 2619 | – | 2622 |
| 9. | சாலை ஆய்வாளர் | – | 1151 | – | 1151 |
| | **மொத்தம்** | **27** | **5258** | **49** | **5334** |



**முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்**

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDII), தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), சிப்காட் (SIPCOT), தேசிய நலவாழ்வு இயக்கம் (NHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் இதர துறை சார்ந்த

பணிகளை கற்றுக் கொண்டு அதன் மூலம் தமது தொழிற்திறனை வளர்த்துக் கொள்ள உதவி புரிகிறது.

பிற துறைகளிலிருந்து அயற்பணியில் பணிபுரியும் அலுவலர்களின் விவரம் பின்வருமாறு:

| துறையின் பெயர் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | | மாவட்டம் | |
| | | ஒதுக்கப் பட்டது | நிரப்பப் பட்டது | ஒதுக்கப் பட்டது | நிரப்பப் பட்டது |
| நிதி | நிதி ஆலோசகர் & முதன்மை கணக்கு அலுவலர். | 1 | 1 | - | - |
| | கணக்கு அலுவலர் | 3 | 2 | 37 | 37 |
| புள்ளியியல் | துணை இயக்குநர் (புள்ளியியல்) | 1 | 1 | - | - |
| | புள்ளியியல் ஆய்வாளர் | 2 | 1 | - | - |
| | உதவி புள்ளியியல் ஆய்வாளர் | 1 | 0 | 36 | 36 |



## 5.4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அடிப்படை பணியாளர்கள், விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலைப்பணி விதிகளுக்குட்பட்ட பணியாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் அனைவரது பணிகள் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மாநில அளவில் 251 பணியாளர்களும், மாவட்டங்களிலும் மற்றும் பிற அலுவலகங்களிலும் 98326 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் விவரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

## அட்டவணை

## அரசிதழ் பதிவுபெறாத பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| அரசு பணியாளர்கள் | | | |
| | | இயக்குநரகம் | மாவட்டம்/ இதர அலுவலகங்கள் |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 47 | 3936 |
| 2 | உதவியாளர் | 49 | 5642 |
| 3 | இளநிலை உதவியாளர் | 38 | 3171 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 17 | 185 |
| 5 | தட்டச்சர் | 26 | 1054 |
| 6 | ஓட்டுநர் | 11 | 934 |
| 7 | பதிவுரு எழுத்தர் | 7 | 149 |
| 8 | அலுவலக உதவியாளர் | 54 | 670 |
| 9 | இரவுக் காவலர் | 2 | 135 |
| 10 | மசால்சி | 0 | 14 |
| **மொத்தம்** | | **251** | **15890** |



| **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | |
|---|---|---|
| **அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்** | | |
| 1 | ஓட்டுநர் | 776 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 390 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1533 |
| 4 | இரவுக் காவலர் | 380 |
| 5 | மசால்சி | 9 |
| **மொத்தம்** | | **3088** |
| **ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12525 |
| 2 | தூய்மை பணியாளர் | 26404 |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40419 |
| **மொத்தம்** | | **79348** |

# 6. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

## 6.1 திறன் மேம்பாடு

மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, அரசு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களின் திறமை, அறிவு திறன், ஆக்க திறன், ஆற்றல் மற்றும் செயல் திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் மிகவும் அவசியமாகும். அவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி என்பது மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துவதுடன், திறன்பட்ட செயல்பாட்டின் மூலம் அரசு திட்டங்களின் வெற்றியை உறுதி செய்கிறது.

தமிழ்நாட்டில் பின்வரும் மூன்று நிலையில் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்கள் உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| I. | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அனைத்து மாவட்டங்கள் |
| II. | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், சத்திய விஜயநகரம். | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், திருவண்ணாமலை செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி (7 மாவட்டங்கள்) |
| | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் (7 மாவட்டங்கள்) |
| | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பட்டுக்கோட்டை | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை (7 மாவட்டங்கள்) |
| | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பவானிசாகர் | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்). |



| | | |
|---|---|---|
| | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தே.கல்லுப்பட்டி | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (8 மாவட்டங்கள்). |
| III. | ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள்(DRCP) | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மையம் வீதம் 37 மாவட்டங்கள். |

## 6.2மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், இந்நிறுவனமானது, ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் உள்ள ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவு, திறன் மேம்பாடு மற்றும் நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை அளிக்கின்றது. மேலும் பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு படிப்புக்களுக்கான

பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தலும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், **1975–ன்** கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

**பயிற்சிக்கான நிதி ஆதாரம்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants–in–Aid) தொடர் செலவினத் தலைப்பில் மாநில அரசிடமிருந்து பெறுகின்றது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் பல்வேறு பயிற்சிகளை அளிக்க, தேசிய கிராம சுயாட்சி திட்டம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் மூலமாக மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி



பெறுகிறது. இதன் மூலம் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு வருடமும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சசத்தின் மூலம் தொடரா செலவினத்தின் 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 6.2.1 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மையங்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் நான்கு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்

2. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவன மேம்பாட்டு மையம்
4. ஊரக பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்

## 6.3 பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (cascading Model) பயிற்சிகள்அளிக்கப்படுகின்றன.



இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

## 6.4 பயிற்சி செயல்திறன்

2023–24–ல் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலம் 91 பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 2607 நபர்களுக்கு உள்வளாக பயிற்சியும் 81 நபர்களுக்கு வெளிவளாக பயிற்சியும் வழங்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சியின் மூன்று மாத சான்றிதழ் பயிற்சியில் 211 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. வெளி வளாக பயிற்சியாக கிராமப்புற இளைஞர்களுக்கான தன்னார்வ தொண்டு மற்றும் சமூக சேவைகள் பயிற்சி மூலம் 390 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் இணைய வழி வகுப்பாக (Webinar Virtual Training) 379 வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் 120 நபர்களுக்கு Indian Institute of Human Settlement, Bangalore (IIHS) மூலம் தலைமை மேலாண்மை (Leadership Management) பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மூலம் வெளிவளாக பயிற்சியாக 435 உதவி பொறியாளர்களுக்கு புவியியல் தொழில் நுட்பத்தை கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட யூக்த்தாரா (Yuktdhara MGNREGS) தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி வேலைகள் திட்டமிடல் பயிற்சி வழங்கப்பட்டது.



**6.5கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டம் (GPDP) வகுப்பதற்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள்(NGOs) உடன் இணைந்து செயலாற்றுதல்.**

2023 – 24 ஆண்டு திட்டத்தின் படி, இந்திய அரசியலமைப்பின் 11வது அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 29 இனங்களின் அடிப்படையில் 740 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சித் திட்டம் தயாரிக்க கல்வி நிறுவனம் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கிராம வளர்ச்சி திட்டம் தயாரிக்க ஏதுவாக தலா ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ. 20000/– நிதி உதவி வழங்க இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் படி நவம்பர் 2023ஆம் ஆண்டு 24 மற்றும் 25 தேதிகளில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 2023–24ஆம் ஆண்டில் உயர் கல்வி நிறுவங்களான இந்திய தொழில் நுட்ப கழகம், சென்னை சமூக பணிகள் பள்ளி, காந்தி

கிராமம் ஊரக நிறுவனம், மதர் தெரசா பல்கலைக்கழகம் SRM பல்கலைக்கழகம், சாய்ராம் கல்வி நிறுவனங்கள், சென்னை கிறிஸ்துவ கல்லூரி, கோவை அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு 216 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊராட்சி கற்றல் மையம்**

சிறப்பாக செயல்படும் ஊராட்சியினை பிற ஊராட்சிகளை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பார்வையிட்டு பட்டறிவு பயணம் மேற்கொள்வதன் மூலம் சிறந்த வழிமுறைகளை கற்றுக்கொள்ள ஏதுவாக சிறப்பாக செயல்படும் ஊராட்சியினை கற்றல் மையங்களாக (Panchayat Learning Center) அமைக்க அறிவுரை வழங்கப்பட்டது. 2023–24–ம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மூலம் 10 ஊராட்சிகள் கற்றல் மையங்களுக்காக



தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவை செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கோவளம், படூர், மண்ணிவாக்கம், வெள்ளபுத்தூர் கிராம ஊராட்சிகள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓடந்துறை கிராம ஊராட்சி, மதுரை மாவட்டத்தில் பூஞ்சொத்தி கிராம ஊராட்சி , நாமக்கல் மாவட்டத்தில் முத்துக்காபட்டி கிராம ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரதாபராமபுரம் கிராம ஊராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வையம்பட்டி கிராம ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இட்டுக்கால் அகரம் கிராம ஊராட்சி ஆகியவையாகும்.

## 6.6 இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில் நுட்ப நிறுவனம் – சென்னை, காந்தி கிராமம் ஊரக நிறுவனம், குஜராத் மாநிலம் ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மெட்ராஸ் சமூக பணிகள் பள்ளி, தேசிய தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், எஸ்.ஆர்.எம்.

பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் பயிற்சி வளங்கள் மற்றும் பயிற்றுனர்களை பகிர்ந்துகொள்ளவும் கூட்டு பயிற்சிகள் நடத்தவும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இவ்வொப்பந்தங்கள் மூலம் பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, களவேலைகள், வெளியீடுகள் போன்ற செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்கள் தங்களுடைய மாணவர்களுக்கு பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், நிறுவனத்துடன் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும் திட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த செயல்பாடுகளை(Documentation of best practices) ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.



## 6.7 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

## 6.8 செயல்திறன்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சித்தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கம்

மற்றும் கையேடுகளின் அடிப்படையில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்த பட்சம் 6,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், வெளிவளாகப் பயிற்சியையும் உள்ளடக்கி அதிகபட்சமாக 25,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளது.

### 6.8.1. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது.

ஒன்றிய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும், ஒவ்வொரு ஆண்டும் பயிற்சித்திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும்



இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

பல்வேறு பயிற்சிகளை அளிக்க மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு, தேசிய கிராம சுயாட்சி திட்டம், மாநில நிதிக்குழு மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய திட்டங்களில் மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

### 6.8.2. பயிற்சி செயல்திறன்

2023–24 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் மூலம் 12 பயிற்சிகள் நடத்தப்பட்டு 8192 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 6.9 ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலர்கள், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் ஆகிய ஊராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள்



மற்றும் கிராம ஊராட்சி நிலையிலான அமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**பயிற்சி செயல்திறன்**

இந்நிறுவனமானது 2023–24ஆம் ஆண்டில் 9 பயிற்சிகள் மூலம் 93318 பங்கேற்பாளர்களுக்கு பயற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 6.10 மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (Revamped RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசானது மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தினை 2022–இல் அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர்

பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030–க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RRGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப்பிரிவு, ஊராட்சி கட்டிடம் மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல் கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (1.5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.



2024–25 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் நீடித்த நிலையான வளர்ச்சி 9 இலக்குகளின் உள்ளூர்மயமாக்குதலுக்கு (LSDG) தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்குப்படுவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

# 7. வரவு செலவுத் திட்டம்

# 2024 – 2025

## 7. வரவு செலவுத் திட்டம் 2024–2025

2024–2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.27,922 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.22,699 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.5,223 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 8. முடிவுரை

## 8. முடிவுரை

அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய குடிநீர், சுகாதாரம், சாலை வசதிகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஆக்கப் பூர்வமான மற்றும் தன்னிறைவு பெற்ற வளர்ச்சியடைந்த ஊரக சமுதாயங்களை உருவாக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உறுதி பூண்டுள்ளது. ஊராட்சிகளை தூய்மையாகவும், பசுமையாகவும், எவ்வித காலநிலையையும் எதிர்நோக்கும் அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்தி, துடிப்பான பொருளாதாரத்தை கொண்ட நன்கு இணைக்கப்பட்ட கிராமபகுதிகளாக மாற்றுவதுடன் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் விதமாக ஊரக பகுதிகளை ஆற்றல் படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அமைப்புகள் கிராமப்புற அளவில் அனைத்து துறையின் திட்ட செயலாக்கங்களை ஒருங்கிணைத்து செயல்படுவதில் முக்கிய பங்குவகிக்கிறது. ஊராட்சியின் அனைத்து நிலை அடுக்குகளுக்கு மத்திய மாநில அரசு திட்டங்களை கிராமப்புற ஊராட்சி வரை கொண்டு சென்று ஓர் மேம்பட்ட ஊரக சமூகத்தை நிர்மாணிக்கும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது. சிறந்த நிர்வாகம், கிராமப்புற மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட இயற்கை வள மேலாண்மை, பசுமை பரப்பை அதிகரித்தல் மற்றும் கரிம உமிழ்வினை குறைத்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கும் வண்ணம் இத்துறை செயல்பட்டு வருகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை எய்திட வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்கல் அடிப்படை என்பதனை கருத்தில் கொண்டு ஊராட்சி நிர்வாக மேம்பாட்டின் செயல்பாடுகளுக்கு உத்வேகம்



அளிக்கப்பட்டு ஊராட்சியின் அனைத்து நிலையிலும் நீடித்த நிலையான மற்றும் சமமான எதிர்காலத்தை நோக்கமாக கொண்டு செயலாற்றி வருகிறது.

திட்டம், பணிகள் மற்றும் சேவைகளை அமுல்படுத்துவதற்கு தரக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் உள்ளன. இது திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கான தரத்தினை மேம்படுத்துகிறது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் மற்றும் திறமையான துறை வல்லுநர்கள் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதையும், செயல் முன்னேற்றம் மற்றும் சமூக உட்கட்டமைப்பை மேம்படுத்துவதையும் உறுதி செய்கிறார்கள்.

கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், கிராமப்புற பள்ளி மேம்பாடு மற்றும் கிராமப்புற சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய முதன்மைத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. கிராம பஞ்சாயத்து அளவில் கிராம சுகாதாரம், குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு முன்னுரிமையளிப்பத்துடன் சிறந்த தரநிலை மற்றும்

பயனுள்ள வள பயன்பாடு மற்றும் சேவை வழங்கலுக்கான அடிப்படையை நோக்கமாக கொண்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின்** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் நாட்டின் முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைய **திராவிட மாடல் அரசு தனித்துவமான வளர்ச்சி மாதிரியை பின்பற்றி** தொய்வடையாத அர்ப்பணிப்புடன் ஊரக வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும்.

**இ. பெரியசாமி**

**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**

**தமிழ்நாடு அரசு**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 26.12.2023 அன்று குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறைகள், 50 கிராம ஊராட்சி செயலக கட்டிடங்கள், 102 ஊராட்சி மன்ற கட்டிடங்கள் மற்றும் 5 ஊராட்சி ஒன்றிய கட்டிடங்கள் ஆகியவற்றை காணொலி காட்சி மூலம் தலைமை செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 26.09.2023 அன்று குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 150 கோடி ரூபாய் செலவில் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறைகளை தலைமை செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 02.08.2023 அன்று ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 253 வாகனங்களை தலைமை செயலகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.


## மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை



# மாவட்ட வாரியான கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை




**மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு**
**(மக்கள் தொகைக் கணக்கெடுப்பு – 2011)**



# மாவட்ட வாரியாக ஊரகச் சாலைகளின் நீளம்




## ஊரகச்சாலைகள்





| | | |
|---|---|---|
| | மண் சாலை | 23955 கி.மீ |
| | சரளைக்கல் சாலை | 2598 கி.மீ |
| | ஓரடுக்கு கப்பி சாலை | 8889 கி.மீ |
| | ஈரடுக்கு கப்பி சாலை | 1351 கி.மீ |
| | தார்ச்சாலை | 97386 கி.மீ |
| | சிமெண்ட் சாலை | 3629 கி.மீ |
| | மொத்தம் | 137809 கி.மீ |

## ஊராட்சி ஒன்றிய சாலைகள்





| | |
|---|---|
| மண் சாலை | 850 கி.மீ |
| சரளைக்கல் சாலை | 112 கி.மீ |
| ஓரடுக்கு கப்பி சாலை | 342 கி.மீ |
| ஈரடுக்கு கப்பி சாலை | 69 கி.மீ |
| தார்ச்சாலை | 23123 கி.மீ |
| சிமெண்ட் சாலை | 392 கி.மீ |
| மொத்தம் | 24887 கி.மீ |

## கிராம ஊராட்சி சாலைகள்





| | |
|---|---|
| மண் சாலை | 23106 கி.மீ |
| சரளைக்கல் சாலை | 2486 கி.மீ |
| ஓரடுக்கு கப்பி சாலை | 8547 கி.மீ |
| ஈரடுக்கு கப்பி சாலை | 1282 கி.மீ |
| தார்ச்சாலை | 74263 கி.மீ |
| சிமெண்ட் சாலை | 3237 கி.மீ |
| மொத்தம் | 112922 கி.மீ |

## ம.கா.தே.ஊ.வே.உ.தி . ஆண்டுவாரியான நிதி முன்னேற்ற அறிக்கை



# ம.கா.தே.ஊ.வே.உ.தி . ஊரக கட்டமைப்பு பணிகள் 2023–24





கிருஷ்ணகிரி மாவட்டம் – கெலமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்
ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டம் மதிப்பீடு ரூ. 3.10 கோடி



திருநெல்வேலி மாவட்டம் – ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடம்
ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டம் மதிப்பீடு ரூ. 9.50 கோடி



பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்-III

சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் , MRL-21 SU - மணிவிழுதான் தெற்கு புதூர் வழி மணிவிழுதான் வடக்கு புதூர் (1/600-5/900 கி.மீ.) சாலை அமைத்தல்

மதிப்பீடு : ரூ.232.30 இலட்சம்



நபார்டு- ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)
தருமபுரி மாவட்டம், அரூர் ஊராட்சி ஒன்றியம்
சட்டையம்பட்டி முதல் கைலாவரம் சாலை கி.மீ 1/6-ல் வாணியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்
மதிப்பீடு ரூ. 395.46 இலட்சம்

## திட்டம் – ஜல் ஜீவன் இயக்கம்



செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் ஒன்றியம், வேம்பேடு ஊராட்சி, காட்டூரில் 30,000 லிட்டர் மதிப்புள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, நீர் மற்றும் அறை மற்றும் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணி –மதிப்பீட்டுத் தொகை – 21.4 இலட்சம்



குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டம், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நாட்டுச்சாலை ஊராட்சியில் புதிதாக இரண்டு வகுப்பறை கட்டுதல் மதிப்பீடு ரூ.29.60 லட்சம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், திருவண்ணாமலை மாவட்டம்,
துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், சீலபந்தல் ஊராட்சியில் பண்ணை குட்டை அமைத்தல்
மதிப்பீடு ரூ.1.78 லட்சம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம், மேலச்சீந்தலைச்சேரி ஊராட்சியில் வீரையன் ஓடையில் தடுப்பணை அமைத்தல்

மதிப்பீடு ரூ.7.40 லட்சம்



அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிதம்பரபுரம் ஊராட்சியில் ஆண்டாள் ஊரணி மேம்பாடு செய்தல் மதிப்பீடு ரூ.18.45லட்சம்

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II



ஊராட்சி, ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மிதிவண்டி நிறுத்தும் கூடம் அமைத்தல்
மதிப்பீடு – ரூ. 3.55 இலட்சம்
பெரியசீரகாபாடி ஊராட்சி, வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்



சின்னபுதூர் விநாயகர் கோவில் தெரு, சிமெண்ட் சாலை அமைத்தல்
மதிப்பீடு – ரூ,4.06 இலட்சம்
செம்மாண்டகுப்பம் ஊராட்சி, தருமபுரி ஊராட்சி ஒன்றியம், தருமபுரி மாவட்டம்

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்



கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் ஊராட்சி,
சமத்துவபுரத்தில் சமத்துவ சுடுகாடு அமைத்தல்
மதிப்பீடு ரூ.5.91 இலட்சம்